# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. I Issue 3 June 2011

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்

அஜெண்டா ........ 2
ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள் ........ 5
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 7
அன்பர் கடிதம் ........ 15
உணர்வுமயமான செயல்பாடும் அறிவுடைமையின் அவசியமும் ........ 17
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 27
லைப் டிவைன் ........ 28
இம்மாதச் செய்தி ........ 36
சாவித்ரி ........ 37
அன்னையின் தரிசனம் ........ 39
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 46
யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 49
லைப் டிவைன் - கருத்து ........ 61
நிலையும் நினைப்பும் ........ 64

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

**உலகை ஆட்டிப் படைக்கும் எந்த நிகழ்ச்சியும் ஒவ்வொருவர் உள்ளேயும் பிரதிபலிக்கும்.**

**சிறியது, பெரியதை அசைப்பது பிரம்ம ஜனனம். பெரியது சிறியதால் அசைய விரும்புவது பிரம்மார்ப்பணம்.**

**உலகைச் சுற்றுவது திறமை. உள்ளே போவது சரணாகதி. சரணாகதியைத் தேடி திறமையைச் செலுத்துகிறோம்.**

**எந்த நேரமும் ஆண்டவனை நோக்கி அடியெடுத்து வைக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் இல்லை.**

## The higher standard of morality is not against ego (Volume 10, 1969, Page 32)

## உயர்ந்த இலட்சியம் அகந்தையால் பாதிக்கப்படுவதில்லை

- மனிதனுடைய குறை ஆண்டவனை பாதிப்பதில்லை.
- எந்த ஆற்று அழுக்கும் கடலின் பரிசுத்தத்தைப் பாதிப்பதில்லை.
- எலிசபெத் திட்டியதெல்லாம் டார்சியின் பிரியத்தை பாதிக்கவில்லை.
- விகாரமான முகம் தெய்வ திருஷ்டிக்கு அழகு.
- குழந்தை தாயின் மடியில் மலம் கழிப்பது தாயைக் குறைப்படுத்துவதில்லை.
- கணவன் கல்லாக இருந்து கறுப்பாக செயல்பட்டாலும் கற்புக்கரசியின் பவித்திரம் பாதிக்கப்படுவதில்லை.
- அன்பர் அறிவின் குறை *The Life Divine*இன் ஜோதிக்கு பங்கம் விளைவிப்பதில்லை. அது அன்பரை முழுமையாக வந்தடைகிறது.
- பொய்யை கருவியாக்கி அதனால் வாழும் மனிதர்களின் போக்கு, அன்னையின் அருள் பாங்க் கடனாக வருவதைப் பாதிப்பதில்லை.
- சேவையின் சிறப்பு, பெறுபவரின் இருளால் குந்தகம் அடைவதில்லை.



- பிழைக்க வழியில்லை என்ற நோயாளியை பிழைக்க வைக்கும் டாக்டர் அறிவும், சிகிச்சையும், நோயாளி பிச்சைக்காரன் என்பதாலோ, குற்றவாளி என்பதாலோ பாதிக்கப்படுவதில்லை.
- **மனிதனுக்கு அகங்காரமிருப்பதால் ஆண்டவன் அருள் அவனைத் தேடி வரும்பொழுது அருள் கறைபடுவதில்லை.**
- விபசாரியின் மனநிலை, அவள் ஆத்மாவைப் பவித்திரமாக விரும்பும் புனித ஜீவனின் அன்பின் சிறப்பைக் கெடுப்பதில்லை. *(டால்ஸ்டாய் கதையில் பிரபு தன் வேலைக்காரியை கர்ப்பவதியாக்கியதால் அவள் விபசாரியாகி, கொலை செய்து, கோர்ட்டில் குற்றவாளியாக வரும்பொழுது பிரபு ஜூரியாக இருக்கிறார். மனம் மாறி அவளை மணக்க விரும்புகிறார். அவர் உயர்ந்த அன்பு அவள் தாழ்ந்த செயலால் கறைபடவில்லை.)*

  ***கறை படும் அன்பு களங்கமற்றதில்லை.***

  அன்பின் உன்னதம் உயர்வானால், கறை அதைத் தீண்டியவுடன் கரைந்து போகும்.
- கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற சொல்லுக்குரிய விசேஷமிது. மனைவி கழுதையாக இருக்கலாம், கறையே உருவாக இருக்கலாம். கணவன் கடமை உணர்ச்சியினின்று எழும் பிரியமும், அன்பும் கழுதையை கற்பக விருக்ஷமாக்கும்.
- குறை உலகுக்கு, குறையுடைய கண்ணுக்கு. குறை குறையில்லை, உள்ள குறையை விலக்க வெளியில் எழுவது குறை. குறைக்கு ஜீவனில்லை. பெரும் நிறை மனிதப் பார்வைக்குக் குறையாகக் காட்சியளிக்கும்.
- *“அங்கு பாவம் புண்ணியமாகிறது”* என்பது *சாவித்திரி.*

- ★ *அதிர்ஷ்டமான ஆயிரம் வருஷப் பரிசு அதன் முன் அற்பமாகும்* என்பது *சாவித்திரி* யில் வேறொரு வரி.
- ★ பிரம்மம் தான் அனுபவிக்கும் ஆனந்தத்தை (Bliss) வளரச் செய்ய வகுத்த வழி இருளைச் சிருஷ்டித்தது. இருளாக மாறிய அருள் மீண்டும் அருளாக மாறுவது ஆனந்தம் வளரும் ஆனந்தமாவதாகும். இறைவன் அதைச் சிருஷ்டிக்க சிருஷ்டியை நாடினான் என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- ★ தனக்காக வாழும் மனிதன் பிறருக்காகவே வாழ ஆரம்பித்தால், பிறர் வாழ்வு ஆன்மாவில் மலர்வதற்காகவே வாழ ஆரம்பித்தால் அது அர்ப்பணமான வாழ்வாகும். **சமர்ப்பணம் அருளுக்கு அர்ப்பணமானால், ஆனந்தம் அனைத்து முனையிலும் வளரும் ஆனந்தமாகும்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

***எவ்வளவு உயரமும் எட்டும் தீவிர பிரார்த்தனைகள் பலிக்காமலிருப்பதுண்டு. ஏனெனில் இம்முறையுள் இப்பிரார்த்தனைக்கு எதிரானது இருக்கும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

இச்சின்னங்கள் எழ நூறு ஆண்டுகளும் ஆயின. இன்று ஒரே ஆண்டிலும் அவை உருவாகின்றன.

***நூறாண்டு ஓராண்டாயிற்று.***



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ ரீதியான கருத்துகளுக்கு உண்டான வரையறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

| | |
|---|---|
| 11. அருவெறுப்பு: | தனக்கு பிடிக்காததை தள்ளி வைக்க வேண்டும் மற்றும் அதனிடமிருந்தும் தள்ளி நிற்க வேண்டும் என்ற உணர்வு. |
| 12. கோபம்: | ஒருவருடைய சூழ்நிலை அவருடைய கட்டுப்பாட்டை மீறுவதால் அவர் ஒரு இயலாமை நிலைக்கு தள்ளப்படும் பொழுது ஏற்படுகின்ற உணர்வு. |
| 13. உள்ளெழுச்சி: | நம்முடைய பர்ஸனாலிட்டியின் ஆழத்தில் இருந்து கற்பனைகளும், காட்சிகளும், கருத்துகளும் தோன்றுவதை உள்ளெழுச்சி என்கிறோம். |
| 14. காட்சி: | உயர்ந்த ஜீவிய நிலைகளிலிருந்து நமக்குத் திடீரென்று தென்படுகிற உண்மை. |
| 15. அமைதி: | நாம் அசைய முடியாத அளவிற்கு நம்மை சாந்தி தொடும்பொழுது அதை நாம் அமைதியாக உணர்கிறோம். |
| 16. மௌனம்: | சக்தி அசையாமல் நிலைப்பெற்றிருக்கும் பொழுது அதை நாம் மௌனமாக உணர்கிறோம். |
| 17. சத்தியஜீவியம்: | சச்சிதானந்தம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பொழுது சத் சத்தியமாகவும், சித் ஜீவியமாகவும், ஆனந்தம் வரம்பற்ற |

நிலையாகவும் மாறுகின்றன. இப்படி சத்தியமும், ஜீவியமும் வரம்பற்ற நிலையும் ஒன்றாக காட்சி அளிக்கும் பொழுது அதை சத்தியஜீவிய நிலை என்கிறோம்.

18. சின்சியரிட்டி: உண்மையோடு நம் மனநிலை ஒத்து இருப்பதை நாம் சின்சியரிட்டி என்கிறோம்.

19. சின்சியரிட்டி கெட்ட நிலை: உண்மையோடு ஒத்து போகின்ற நிலை கெட்டுப் போகும்போது சின்சியரிட்டி கெட்டு போய்விட்டது என்கிறோம்.

20. ஏற்புத்திறன்: இறை உணர்வுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனநிலையை ஏற்புத்திறன் என்கிறோம்.

*தொடரும்.....*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உணர்வு எண்ணத்தை ஏற்றால் எண்ணம் வலிமை பெறும். ஆனால் அது சத்தியக் கருத்தாகாது. ஏனெனில் அதிலுள்ள சக்திக்கு முழுத் திறன் வருவதில்லை.

***உணர்வு எண்ணத்தை ஏற்றால் எண்ணம் வலிமை பெறும்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ தெய்வீகம்

★ **உலகத்தின் பாவத்தை உன்னத இலட்சியமாகச் செய்வது தெய்வீகப் பரிணாமம். எதிராக செயல்படுவது உள்ள சொரணையையும் அழிக்கும்.**

- இரண்டும் முடிவில் இறைவன் திருவடியில் சேர்க்கும்.
- நாமறிந்த பையனுடைய தரித்திரம் அவர்கள் குலம் பெற்ற தரித்திரம். அவன் அண்ணனும் நானும் யோசனை செய்து வியாபாரம் ஆரம்பித்து அது போக உதவியது. படிப்பு தரித்திரத்தை அழிக்கும். இவன் SSLC பாஸ் செய்து பட்டம் பெற்றது அந்த ஜாதியின் தரித்திரம் அதிர்ஷ்டமாக உதவியது. இது transformation திருவுருமாற்றம். இதுவே கிராமத்திலும் நடந்தது. மற்ற நண்பர் இருவர் வாழ்வும் இதுவே.
- பிள்ளைகள் வாழ்வில் அஸ்திவாரத்தின் தரித்திரம் இது போல் மாற வேண்டும்.
- திருடு, இலஞ்சம், கெட்ட நடத்தை, கொலையை சிறியதாக்கும் மனப்பான்மைகள் ஏராளமாக உண்டு. அவை சில ஜாதியினரிடம் ஏராளம். அதைக் கூறினால் “அதன் பிறகு தொடர்பு கொள்ள முடியாது”. மருமகள் அங்கு திருவுருமாற transform வேண்டும்.

நம் சுபாவத்தை அந்த ஆழத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டும். இது அன்னை Mother யார் எனக் கூறும். யோகத்தை ஏற்பவர் ஒரு மாதத்தில் இந்த வாய்ப்பை அழித்துவிடுவார்கள். தோப்பில் வேலை செய்தவர் பொய், திருடு, சாகஸம், கெட்ட எண்ணம். மனைவிக்கும் மகனுக்கும் அது குறைவு. பெரிய பையனுக்கு கெட்ட எண்ணம் அதிகம். அவர் நம்மிடமிருந்து போனது, அவையெல்லாம் நம் பிள்ளைகளை விட்டு எதிர்காலத்தில் போக முடியும் எனக் காட்டுகிறது.

- ✲ பெரிய பண்டிட் 10 பவுன் நகையை வரும் மாப்பிள்ளைக்கு தண்டனையாகப் போடுவோம். நின்று போன நிச்சயதார்த்தத்தை நிறைவேற்று என்றார். வேறு மாப்பிள்ளையைக் கொண்டு வந்தவர் ஊரில் பெரிய மனிதர். முதல் நிச்சயதார்த்த 10 பவுனை வரும் மாப்பிள்ளைக்கு உபரியாகத் தரலாம் என்றார். இது மன்னிக்க முடியாத குற்றம். அவர் பெற்ற தண்டனை பெரியது. இது பேசக் கூடாத வார்த்தை. தரித்திரம் பேசச் சொல்கிறது. பிறருக்கு சேர வேண்டியதை சந்தோஷமாக மறுப்பது கெட்ட எண்ணம் மட்ட எண்ணமாகப் பரிமளிப்பது.

★ கறுப்பு வெள்ளையாகத் தெரியும்.

கண்ணாடி கலராக ஊர் தெரியும்.

நேர் எதிராக உலகை அறியும் மனிதர்கள் இவர்கள்.

அதே போல் அன்னையைப் பற்றி வினோதமாகப் பலவற்றை நினைத்துக் கொள்வார்கள்.



பாஸிட்டிவாக இருந்தால் பெரிய மனிதர்கள் உயர்ந்தவர் எனவும்

நெகட்டிவாக இருந்தால் பெரிய மனிதர் பொல்லாதவர் எனவும் நினைப்பார்கள்.

மூட நம்பிக்கை ஏராளமாக இருக்கும்.

அதைப் போல் பலனை எதிர்பார்ப்பார்கள்.

தாங்கள் செய்யாததெல்லாம் பிறரிடம் எதிர்பார்ப்பார்கள்.

நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும் என Mother அன்னையிடம் நினைப்பார்கள்.

எந்த இடத்திலும் - கோவில், சாமியார் - நடக்காததை Mother அன்னையிடம் எதிர்பார்ப்பார்கள்.

குறைந்தபட்சமும் முறையாக இருக்கமாட்டார்கள்.

*= மதரிடம் நடக்காதது நடப்பதை இவர்கள் கண்டு விட்டனர் = எனப் பொருள்.*

மதரிடம் வந்துவிட்டதால் எந்த தவறும் நடக்கக்கூடாது.

எல்லாவித அதிர்ஷ்டமும் வர வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

மாமியார் தனக்கு அடங்க வேண்டும்.

முதலாளி Boss தன்னிஷ்டப்படியிருக்க வேண்டும்.

பழைய எதிரிகள் மனம் மாற வேண்டும் என வேடிக்கையானவற்றை நினைப்பார்கள்.

இவ்வளவையும் அரசியல் நண்பரிடம் நான் பார்த்துள்ளேன்.

டிராலப் கதையில் லாரா கதாநாயகி. பெரிய மனம் படைத்தவள். அழகான Finn என்பவனை விரும்புகிறாள். அவனுக்குப் பணமில்லை. தான் தன் £40,000 பவுனை சூதாட்டத்தில் கடன் பெற்ற அண்ணனுக்குக் கொடுத்து விட்டாள். 1½ மில்லியன் பவுன் சொத்துள்ள கென்னடியை, காபினட் மந்திரி, மணக்கிறாள். கென்னடியின் அல்ப புத்தியுடன் அவளால் குடும்பம் செய்ய முடியவில்லை.

- Finn அழகானவன். எந்த இலட்சியமுமில்லாதவன்.

  நல்லவன். வருமானமில்லாதவன்.

  அவன் சொந்த ஊரில் மேரி என்ற பெண் அவனால் கர்ப்பமாகி, அவளைக் கல்யாணம் செய்திருக்கிறான். பிறகு அவள் பிரசவத்தில் இறந்துவிட்டாள். பின் இதை லாராவிடம் சொல்லவில்லை. லாரா கணவனை விட்டு வந்துவிட்டாள். ஃபின் மீது அவளுக்கு உயிர்.

  ஃபின்னுக்கு வயலெட் மீது உயிர்.

  லாரா எண்ணம் பூர்த்தியாக வழியில்லை.

  ஃபின் எண்ணம் பூர்த்தியாகும் வழியும் இல்லை.

- இதைக் காதலிலக்கியம் என்பர்.

  எழுத்து அற்புதம்.

  மனித இதயம் இலட்சியத்துத் தகுதியுடையதில்லை.

  இலக்கியப் படிப்பு மனத்தைத் தெளிவுபடுத்தும்.

  இலக்கியம் உலக ஞானம் தரும்.

- மனம் உண்மையாக இருப்பது உண்மை.

  அந்த உண்மைக்கு வாழ்வில் இடமில்லை.

  இந்த பாத்திரங்கள் அனைவரும் ஒரு பொய் சொல்ல மாட்டார்கள்.

  ஒரு கோள் சொல்வதில்லை, ஒரு வார்த்தை தவற மாட்டார்கள்.

  உண்மையான மனம் இவர்கட்கு வாழ்வில் காதலைப் பூர்த்தி செய்வதில்லை.

  £40,000 பவுனை சூதாடும் அண்ணனுக்கு கொடுத்து விட்டு, அதனால் தான் விரும்பும் அழகனை மணப்பதைத் துறக்க பரந்த மனம் வேண்டும். அவ்வளவு பெரிய மனமும் உண்மையும் இருந்தாலும் வாழ்வில் காதலைப் பூர்த்தி செய்யவில்லை.

  ஏன் என்ற கேள்விக்குரிய பதில் அற்புதம்.

  கதையைப் படித்தவர்க்குச் சொல்லலாம்.

விளக்கமாகக் கூறினால் விவரம் புரியும். சுருக்கம் தெளிவுபடாது. லாரா உயர்ந்த மனமுடையவள். அண்ணன் திருந்த வேண்டும், நல்ல குடும்பம் நடத்த வேண்டும் என தன் வாழ்வைத் தியாகம் செய்கிறாள். அந்த தியாகத்திற்கு அவன் தகுதியுள்ளவனில்லை. அவன் வாழ்வு திருந்தி வளம் பெறுகிறது. அவனுடைய தரித்திரம் இவளைப் பிடித்துக் கொள்கிறது. அவனுடைய கர்மத்தில் தலையிட அவளுக்கு உரிமையில்லை. கொடுத்த பணம் £40,000 பவுன் திரும்பி வருகிறது. அத்துடன் கணவன் 1½ மில்லியன் பவுனும் வருகிறது. வாழ்க்கைப் பாலைவனமாகிறது. அவள் காதலித்த அழகனும், அவள் தியாகம் செய்த அண்ணனும், அவள் காதலுக்கும், தியாகத்திற்கும் உரியவரல்ல.

- அவர்களால் அவளைப் பாழாக்க முடிந்தது.

  அவள் வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்ற எண்ணமும் அவர்கட்குத் தோன்றவில்லை.

## ✡ ஒரு மெய்

- ★ குரு ஸ்தானத்திலிருந்தவர் என்னிடம் 5000, 2000, 14,000 என அடிக்கடி பணம் கொடுத்தார். ஆரம்பத்திலேயே அதை நான் அறவே மறுத்தேன். வற்புறுத்திக் கொடுத்தார். தென்னந்தோப்பை விட்டு கிராமத்திற்குப் போன பின் ஒரு இலட்சம் தருவதாகவும், இதை கயிறு தயாரிக்க நான் பயன்படுத்த வேண்டும் என்றார். அப்பொழுது நான் தோப்பிலில்லை. கிராமத்திற்குப் போய்விட்டேன். அதனால் மறுத்துவிட்டேன்.

  *அவர் என்னிடம் சொன்ன ஒரே மெய் இது. 5 ஆண்டு கழித்துக் கூறினார்.*

  அப்படி அவர் கொடுத்தது மொத்தம் 55,000/-. 1973இல் அவருக்கு என் மூலமாக வந்தது ரூ. 1,63,000/-.

  *ஒரு மெய் சொன்னதால் அப்பணம் 3 மடங்காகப் பெருகியது.*

- ★ *ஒரு பொய் சொன்னால் 3 மடங்கு பெருகும்.*

  - ※ Atmosphere rich சூழல் வளமாக இருப்பதால்,

    ஒரு சிறு முயற்சிக்குப் பெரும்பலன் உண்டு.

    ஒரு சிறு தவறுக்கு பெருநஷ்டம் உண்டு என அன்னை கூறுகிறார்.

  - ※ எண்ணம் மெய்யால் மிளிர்ந்து,

    நினைவு நிலையாக சத்தியத்தை நாடி,

    உணர்ச்சி உள்ளபடி உண்மையில் திளைத்தால்,

    மெய், சத்தியம், உண்மை உயிருக்குத் தெம்பு ஊட்டினால்,

    புறமான சத்தியத்தின் அகமான ஆன்மா க்ஷணம் விழிக்கும்.

    *அது அன்னையும், பகவானும் க்ஷணம் வீட்டிற்கு வந்தது போலாகும்.*

  - ※ சொல், பார்வை, நடை, உடை, பாவனை, நினைவு, நிலை என அனைத்தும் சத்தியாரோகணம் - சத்தியத்தின் யாத்திரை - மேற்கொண்டால், வீடு ஆசிரமமாகும். நெஞ்சம் ஆலயமாகும். நினைவு தத்துவமாகும்.

  - ※ என்ன சொல்ல வேண்டும் என நினைத்து சொல்வதைவிட நினைப்பு சொல்லாக வெளி வருவது மேல். அது சத்திய ஜோதியாக இருப்பது நல்லது.



## ☆ *சமர்ப்பணம் செய்து அழகாக எழுதிய ஒரு கடிதம் வெளிநாட்டுக் கம்பனியை சிறிய கம்பனிக்கு பார்ட்னராகக் கொண்டு வந்தது.*

'நான் யார் எனக் காட்டுகிறேன் பார்' என்பதை இரண்டு பார்ட்னர்கள் இருவரும் வாய் ஓயாமல் சொன்னார்கள். அழிந்து போனார்கள். அவர்களால் நமக்கு வாரண்ட் வந்தது. மலை போன்ற வாய்ப்பு. ஆர்ப்பாட்டமாக அழித்தனர்.

- ★ பெற்றுக் கொடுத்தது ஒரு letter கடிதம்.

  எல்லாக் காரியங்களும் அது போல் செய்ய முடியுமா? முடிய வேண்டும். அந்த ஆர்ப்பாட்டம் செயலில், **மனதில் இருக்கக் கூடாது**.

- ★ சொல் பெரிய ஆயுதம். நம்மை முழுவதும் காட்டிக் கொடுத்துவிடும்.

- ★ பொறி வைத்துப் பிடித்து, மாட்டிக் கொண்டாயா எனக் கொக்கரிப்பது, கொம்பேரி மூக்கனாகும்.

★ **ஆராய்ச்சி செய்வதைவிட ஆழ்ந்து ஏற்பது நல்லது.**

அந்த ஆழத்தில் திருவுள்ளத்தை ஏற்பது, மனம் மாறுவது அதிர்ஷ்டம் உற்பத்தியாவது. தரித்திரம் அதிர்ஷ்டமாக மாறுவது அதைவிடப் பெரியது.

★ வீண் செலவு, மனமாற்றத்தால் வரவாக மாறும். அவன் மனம் மாறும் அளவு நாம் மனத்தால் **Mother** அன்னையை ஏற்க வேண்டும்.

★ தரித்திரம் வந்த அடிப்படைக் காரணத்தை இன்று மனம் மாற்றும். மாமியின் கொடுமை[1], தூக்கம்[2], பொறாமை[3], அதிகாரம்[4], வீறாப்பு[5], சுயநலம்[6], புலி[7], நல்லபாம்பு[8], ஆகிய அனைத்தும் உண்மையுள்ளது.

- ❊ அவை புரிய மனம் sincereஆக இருக்க வேண்டும்.
- ❊ திருடு, பொய்[9], கருமி, அல்பம்[10] மாற முடியும்.

*தொடரும்....*

❃❃❃

---

1 முதல் 10 வரை மனிதர்கள்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

திருமணம், பட்டம், கார், விஸ்வாசம், மரியாதை, தேச பக்தி ஆகியவை பெருமுன்னேற்றத்தைக் கொண்டு வந்த சமூகப் புரட்சிகளின் சின்னங்கள்.

***திருமணமும் தேசபக்தியும் செய்த புரட்சி பெரியவை.***



# அன்பர் கடிதம்

***அன்னையே சரணம்!***

நமக்கு வரும் பிரச்சனைகளை வாய்ப்பாக மாற்றிக் கொள்ள அன்னையிடம் வழி உண்டு என்பதற்காக எனக்கேற்பட்ட ஓர் அனுபவம்.

நான் மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் பணி செய்து வந்தேன். ஒரு நாள் எங்கள் வீட்டு septic tankஐ clean செய்வதற்கு துப்புரவுப் பணியாளர்களை வரச் சொல்லியிருந்தேன். குழாய்களில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வருவது வழக்கம். அப்பணியாளர்கள் clean செய்ய வந்த அன்று வர வேண்டிய தண்ணீர், குழாயில் வரவில்லை. எனவே அவர்களை அடுத்த நாளுக்கு மறுநாள், தண்ணீர் வருகின்ற தினத்தன்று வரச் சொல்லி திருப்பி அனுப்பிவிட்டேன்.

அடுத்த நாள் Isolation வார்டில் பணி செய்த சகோதரி லீவு போட்டுவிட்டதால், நான் அங்கு பணி செய்ய நேர்ந்தது. அப்போது காலரா சீசன். காலரா நோயாளிகளைத் தொட்டு பணி செய்துவிட்டு வீட்டுக்குச் சென்றபோது, என் மகள் தெரு முனையிலுள்ள போரிங் பைப்பில் தண்ணீர் எடுத்து வந்து குடம், பக்கெட்டுகளில் நிரப்பியிருந்தாள்.

3வது நாளாக இன்று தண்ணீர் வரும், septic tankஐ clean செய்துவிடலாமென எண்ணியவாறு பணிக்குச் சென்றேன். பணியை முடித்து வீட்டுக்கு வந்தபோது, அன்றும் தண்ணீர் வரவில்லையெனத் தெரிந்தது (எங்கள் தெருவுக்கு மட்டும்). அதனால் இரவு 11 மணிக்கு நானும் என் மகளும் போரிங் பைப்பில் தண்ணீர் அடித்து எடுத்து வந்தோம். 11½ மணி சுமாருக்கு அப்பணியாளர்கள் வந்து clean செய்துவிட்டு சென்றுவிட்டனர்.

பின் 5வது நாளும் தண்ணீர் வரவில்லை. குளித்து முடித்தபின் AE அவர்களைப் பார்க்கச் சென்றேன். அவர் அங்கு இல்லை. எனவே அங்குள்ள பணியாளர்களிடம் ஐந்து நாட்களாக தண்ணீர் வராத விவரத்தை மிகுந்த கோபத்துடன் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன்.

AE வந்ததும் பணியாளர்கள் மூலம் விவரத்தைக் கேட்டறிந்த பின், தண்ணீர் திறந்துவிடப்பட்டது. நான் வீடு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் தண்ணீர் வந்து தொட்டி நிரம்பியது. ஒரு பணியாளர் வந்து தண்ணீர் வருகிறதா என AE உங்களிடம் கேட்டு வரச் சொன்னார் என்றார். பின்னர் தண்ணீரைத் திறந்து விடாமல் தவறு செய்த பணியாளரை வேறு பகுதிக்கு மாற்றிவிட்டார்கள் எனக் கேள்விப்பட்டேன்.

ஓரிரு மாதங்கள் கழித்து மேட்டுப்பாளையத்தில் 6 (over tank) டேங்குகள் கட்டி வருவதாகக் கேள்விப்பட்டு, அவ்வூருக்கு நிரந்தரமாக தண்ணீர் பஞ்சத்தை அன்னை தீர்த்துவிட்டார்கள் என எண்ணி மகிழ்ச்சியடைந்தேன்.

-- M. Sulochana, கடலூர் மையம்.

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தீய சக்திகள் செயல்பட்டால், அவை சூழலைத் தாழ்த்தும்; வாய்ப்பைக் கெடுக்கும்; சந்தர்ப்பத்தைக் கலைக்கும்; மனிதனை வக்கிரமாக்கும். அல்லது அவனை ‘அறிவுடன்’ நடக்கச் சொல்லும்.

***வெளிப்படும் ஆன்மீகம் சூழலாக மாறும்.***



# உணர்வுமயமான செயல்பாடும் அறிவுடைமையின் அவசியமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

N. அசோகன்

4. டார்சி: டார்சி பார்ப்பதற்கு சாந்தமானவனாகவும் அதிகம் பேசாதவனாகவும் தென்பட்டாலும் அவனிடமும் உணர்ச்சி வயப்பட்டு செயல்படுகின்ற குணம் இருக்கிறது. அது சம்பந்தமான நிகழ்ச்சிகள் சிலவற்றை பார்ப்போம்.

(a) எலிசபெத் மேல் அவனுக்கு காதல் வருகிறது. ஏற்கனவே அவளுடைய அக்காவை மணக்க விரும்பிய பிங்கிலியை, பென்னட் குடும்பத்தினர் manners இல்லாதவர்கள், நாகரிகமற்றவர்கள், ஆகவே அவர்கள் வீட்டு பெண்ணை மணக்கக் கூடாது என்று சொல்லி தடுத்து நிறுத்தியிருக்கிறான். இப்பொழுது அதே குடும்பத்தை சேர்ந்த இன்னொரு பெண்ணிடம் அவளை மணக்க விரும்புவதாக சொல்ல விரும்புகிறான். தனக்கு ஒரு நியாயம், தன் நண்பனுக்கு ஒரு நியாயம் என்ற ஒரு double standards முறையற்றது என்று அவனுக்குத் தெரியவில்லை. அந்த அளவுக்கு காதல் மயக்கம் அவனை வீழ்த்தியிருக்கிறது.

(b) தன்னுடைய அந்தஸ்திற்கும், செல்வத்திற்கும் எவளும் உடனே தன் proposalக்கு ஒத்துக் கொள்வாள் என்று நினைக்கிறானே தவிர தன்னை மறுப்பதற்கு எலிசபெத்திற்கு ஒரு இடம் இருக்கும் என்று அவனால் நினைக்கக்கூட முடியவில்லை. அவள் சுமாரானவள் என்று தான் விமர்சித்திருந்ததால் இவள் தன் மேல் கோபமாக இருக்கிறாள், விக்காமைத்தான் இவளுக்கு

பிடித்திருக்கிறது, தன்னைப் பற்றி தவறான அபிப்பிராயம் வைத்திருக்கிறாள் என்பது எல்லாம் அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. நீ ஜென்டில்மேன் இல்லை என்று அவள் அவனை குறை சொல்லும் பொழுது அவனுக்கு பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது. தன் பெருமையிலேயே ஊறிப்போன அவனுக்கு தன்னை திமிர் பிடித்தவன், அகம்பாவி என்று மெரிடன் கிராமத்தில் இருக்கின்றவர்கள் எல்லாம் நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை.

(c) ஒரு பெண்ணிடம் proposal கொடுக்கும் பொழுது அவளுடைய குறைகளைப் பற்றி அவளிடம் சொல்லக் கூடாது. ஆனால் இவனோ அந்தஸ்தில் அவள் குறைந்தவளாக இருந்தாலும், அவளுடைய உறவினர்கள் சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் என்றாலும், இவற்றையெல்லாம் மீறி அவளை விரும்புவதாகச் சொல்கிறான். இப்படி ஒரு proposal கொடுப்பது அறிவில்லாத செயலாகும். அறிவுள்ளவனாக இருந்தால் அவளுடைய குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற உந்துதல் எழுந்தால் அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் சந்தோஷப்படும்படி proposal கொடுத்திருப்பான். மனதில் எழுந்த எண்ணங்களை எல்லாம் அப்படியே அவன் கொட்டியது அவனுடைய செயல்பாட்டை உணர்ச்சிவயப்பட்ட அறிவில்லாத செயல்பாடாகிவிட்டது.

5. லிசி: இந்தக் கதையில் மிகவும் அறிவுள்ளவளாக செயல்படுவது எலிசபெத் என்றுதான் சொல்ல வேண்டும். அவளுக்குள்ள இந்த அறிவு முதிர்ச்சி அவளுடைய வயதை மீறியதாகவுள்ளது. இருந்தாலும் அவளுடைய இளமைக்கே-யுரிய வேகமும் இருக்கத்தான் செய்கிறது. இந்த இளமையின்



வேகமும், காதல் வயப்படுவதில் கிடைக்கக்கூடிய இன்பமும் இப்படி ஒரு விவேகமுள்ள பெண்ணையும் அறிவில்லாமல் உணர்ச்சிவயப்பட்டு செயல்பட வைக்கின்றன என்றால் அதில் எந்த ஆச்சரியமுமில்லை.

(a) விக்காமுடைய அழகான தோற்றமும், pleasant manners அவளை மயங்க வைக்கின்றன. வெளியழகு உள்ளழகிற்கான அடையாளம் என்று எடுத்துக் கொள்கிறாள். ஆனால் உண்மையில் manners என்பது ஒரு தோற்றம்தான், அது உள்ளழகை பிரதிபலிக்கவும் செய்யலாம் அல்லது நெகட்டிவ் பர்சனாலிட்டியை மூடி மறைப்பதற்கும் உதவலாம். விக்காம் விஷயத்தில் இரண்டாவதாக சொல்வதுதான் உண்மையாக இருந்திருக்கிறது. விக்காம் சரியானவன் இல்லை, அவனிடம் பார்த்து பழக வேண்டும் என்று கரோலின் எச்சரிக்கை விடும்பொழுதும் அவள் அதை நம்பகூட தயாராக இல்லை. அவன் நல்லவன் என்று தான் முடிவு செய்திருந்தது ஒருவேளை தவறாக இருக்கலாமோ என்ற சந்தேகம்கூட அவளுக்கு எழவில்லை.

(b) பென்னட் குடும்பத்தினர் மெரிடன் கிராமத்திற்கு வாக்கிங் செல்லும் பொழுதே விக்காமை பார்த்தவுடன் டார்சியின் முகத்தில் தெரிந்த ஒரு அதிர்ச்சியை எலிசபெத் கவனிக்கிறாள். அப்பொழுதே இவர்களுக்குள் ஏதோ தகராறு இருக்கிறது. விக்காமை டார்சிக்கு பிடிக்கவில்லை என்று அவளுக்குத் தெரிந்துவிடுகிறது. நெதர்பீல்டு நடன நிகழ்ச்சியில் அவன் வராததைக் கண்டு ஏமாற்றம் அடைகிறாள். அதே சமயத்தில் டார்சி இவளை தன்னோடு நடனமாட அழைக்கிறான். நடனமாடிக் கொண்டிருக்கும் பொழுது அடிக்கடி மெரிடன் கிராமத்திற்கு நடந்து செல்வீர்களா என்று கேட்கிறான்.

அவள், ஆமாம் அடிக்கடி செல்வோம். சமீபத்தில் சென்ற பொழுதுகூட உங்களையும் பார்த்தோம், வேறு ஒருவருடைய நட்பும் கிடைத்தது என்று மறைமுகமாக விக்காமைப் பற்றி அவனுக்கு நினைவுபடுத்துகிறாள். அதைக் கேட்டவுடன் அவன் முகத்தில் மீண்டும் ஒரு அதிர்ச்சி வருகிறது. பிறகு சிறிது நேரம் கழித்து, உங்களுக்கு யார் மேலாவது அதிருப்தி ஏற்பட்டால் அதை எளிதில் மறக்கமாட்டீர்கள் போலிருக்கிறது என்று மீண்டும் மறைமுகமாக விக்காம் மேல் அவனுக்கு இருக்கிற மனக்கசப்பை நினைவூட்டுகிறாள். இவை இரண்டுமே அறிவில்லாமல் உணர்ச்சிவயப்பட்டு பேசிய வார்த்தைகளாகும். ஒருவர் நம்மோடு பிரியமாக உறவாட வரும்பொழுது அவருக்கு பிடிக்காத விஷயங்களை பேசக்கூடாது என்பது காமன்சென்ஸ். ஆனால் அந்த தவற்றைதான் இவள் செய்கிறாள். இதனுடைய நேரடி விளைவு எப்படி இருக்கிறதென்றால், இவளுடைய உணர்ச்சிவயப்பட்ட பேச்சை தொடர்ந்து லிடியா ஒரு போர் வீரனின் வாளை உருவிக் கொண்டு இங்கும், அங்கும் தாறுமாறாக சத்தம் போட்டுக் கொண்டு ஓடுகிறாள். காலின்ஸ் courtesy முறைகளைப் பின்பற்றாமல் தானே சென்று டார்சியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள முயல்கிறான். இவற்றிற்கு எல்லாம் சிகரம் வைத்தாற்போல் இவளுடைய தாயார் டார்சி காதில் விழும்படி பிங்கிலிக்கும், ஜேனுக்கும் விரைவில் திருமணம் நடக்க இருக்கிறது. மேலும் மற்ற பெண்களுக்கும் இம்மாதிரியே பணக்காரத் தொடர்புகளை உண்டுபண்ண போகிறேன் என்று பெருமையடித்துக் கொள்கிறார். இதன் நேரடி விளைவாக டார்சியும், பிங்கிலியின் சகோதரிகளும் பிங்கிலியைக் கண்டித்து



ஜேனிடமிருந்து விலகச் சொல்கிறார்கள். அவனும் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு நெதர்பீல்டை காலி செய்து கொண்டு லண்டனுக்கே திரும்பிப் போய்விடுகிறான். பென்னட் குடும்பத்தினருடைய கனவுகளும் அந்த நேரத்திற்கு தரை மட்டமாகின்றன.

6. கேதரின் டீ பர்க்: லாங்பர்ன் வீட்டு அருகே லிசியுடன் இவர்கள் போட்ட சண்டை மிகவும் அறிவில்லாமல் உணர்ச்சிவயப்பட்டு செயல்பட்டதாக அமைகிறது. இதன் விளைவாக அதிர்ச்சியும், அவமானமும்தான் மிஞ்சுகிறது.

(a) டார்சிக்கும், எலிசபெத்திற்குமிடையே காதல் மலர்ந்துள்ளது என்று இவர்கள் காதுக்கு ஒரு செய்தி வந்தால் நியாயமாக இவர்கள் உறவுக்கார பிள்ளையான டார்சியைத்தான் விசாரித்திருக்க வேண்டும் மற்றும் கண்டித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை என்று தெரிகிறது. அதை வைத்துப் பார்க்கும் பொழுது ஒருவேளை அவனை கண்டிக்கும் அளவுக்கு தைரியம் இல்லாமல் போயிருக்கலாம் என்று தோன்றுகிறது.

(b) லிசியைத்தான் கண்டிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும், லிசி இவர்களுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்று தெரியும் பொழுது அவளிடத்திற்கே வந்து அதிகார தோரணையில் அவளைக் கண்டித்து சத்தம் போடுவது என்பது அறிவில்லாத செயல்பாடாகிறது. ஆனால் காலின்ஸ் இவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் இருப்பவன். மேலும் பென்னட் குடும்பத்தினருக்கு உறவும் ஆவான். ஆகவே காலின்ஸை பென்னட் குடும்பத்தினருடைய வீட்டுக்கு அனுப்பி, அவனை விட்டு லிசிக்கு எச்சரிக்கை செய்திருக்கலாம். தன்னுடைய முதலாளி அம்மா என்ற

இடத்தில் கண்டிப்பாக காலின்ஸ் இவருடைய கட்டளையை ஏற்று, லாங்பர்னுக்குச் சென்று லிசியை எச்சரிக்கை செய்திருப்பான். அவள் அந்த எச்சரிக்கையை ஏற்கிறாள் அல்லது மறுக்கிறாள். அது அடுத்த கட்டம். ஆனால் தன்னை நேரடியாக லிசி எதிர்த்துப் பேசியது மற்றும் அவமானப்படுத்தியது ஆகிய அசம்பாவிதங்களை தவிர்த்து தன்னுடைய மரியாதையை காப்பாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் இப்படி டார்சியிடமும் போகாமல், காலின்ஸையும் பயன்படுத்தாமல் நேரடியாகத் தானே லாங்பர்னுக்குச் சென்று லிசியிடம் தகராறு செய்தது ஒரு உணர்ச்சிவயப்பட்ட அறிவில்லாத செயலாகவே ஆகிறது.

பிரஞ்சு புரட்சியின் அர்த்தம் என்ன மற்றும் அந்த புரட்சி ஐரோப்பாவில் உள்ள மற்ற நாடுகளுக்கும் பரவினால் ஐரோப்பா முழுவதும் உள்ள உயர்குடி மக்களின் நிலைமை என்னவாகும் என்றெல்லாம் கேதரீன் டீ பர்க் சிந்தித்ததாகவேத் தெரியவில்லை. அப்படி அவர் சிந்தித்திருந்தார் என்றால் லிசியிடம் தகராறு செய்ய வேண்டும் என்று வந்த எண்ணத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார். டார்சி தனக்கு மருமகனாக கிடைக்காமல் போனதற்கு தன் மகளுடைய எனர்ஜி இல்லாத பர்சனாலிட்டியும், ஆரோக்கியமில்லாத உடல்நிலையுமே காரணம் என்று புரிந்து கொண்டு தன்னையும் தன் மகளையுமே நொந்து கொண்டிருப்பார்.

இந்தக் கதையில் வருகின்ற ஆறு கதாபாத்திரங்களுடைய உணர்ச்சிவயப்பட்ட செயல்பாடுகளை இப்பொழுது பார்த்தோம். பொதுவாக உணர்ச்சிவயப்பட்டு செயல்படும்பொழுது நடக்கும் செயல்களை திருத்துவது என்பதோ, அவற்றின் பின்விளைவுகளிலிருந்து தப்பிக்க நினைப்பதோ மிகவும் கடினமான காரியம். இம்மாதிரி தவறுகளை செய்கின்றவர்கள் தலைவிதியே என்று நொந்து கொண்டு, அதனால் வரும் கஷ்டங்களை அனுபவிப்பார்-



கள். திருமதி. பென்னட்டுடைய பர்சனாலிட்டியே முழுவதும் உணர்ச்சிவயப்பட்டு செயல்படக்கூடியது. அவருடைய அறிவில்லாத செயல்பாடுகள் மற்றும் மட்டமான பேச்சையும் மீறி அவருடைய மூன்று பெண்களுக்கு திருமணம் நடப்பதென்பதே ஒரு பெரிய அற்புதம்தான். அவருடைய அறிவில்லாத செயல்பாட்டையும், அவசரத்தையும் மீறி இப்படி மூன்று திருமணங்கள் நடக்கின்றன என்றால் அந்தளவிற்கு அவருடைய பர்சனாலிட்டியில் ஒரு எனர்ஜி இருந்திருக்கின்றது. மற்றும் அவருடைய பெண்களுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் உண்மை இருந்திருக்கிறது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தன்னுடைய அறிவில்லாத செயல்பாட்டினால் வந்த ஏமாற்றத்திலிருந்து காலின்ஸ் சுலபமாக தப்பித்துக் கொள்கிறான். அதாவது தன் கவனத்தை சார்லட்டின் பக்கம் திசை திருப்பி, அவளுக்கு proposal கொடுத்து மானத்தைக் காப்பாற்றிக் கொள்கிறான். தன்னை மணக்க விரும்பவில்லை என்று சொன்ன லிசியை தொடர்ந்து வற்புறுத்தாமல் இருக்குமளவிற்காவது அவனுக்கு ஒரு கட்டுப்பாடு இருந்தது. அவன் சற்று சிந்தித்திருந்தால் மேரி தனக்கு ஏற்றவள் என்று கண்டுபிடித்திருக்கலாம். திருமதி. பென்னட் தனக்கு ஆதரவாக இருந்ததால் அவரின் ஆதரவை வைத்துக் கொண்டு மேரிக்கு proposal கொடுத்து பென்னட் குடும்பத்திலேயே திருமணம் செய்து கொண்டிருக்கலாம். அறிவில்லாமல் லிசிக்கு proposal கொடுத்தது தான் செய்த தவறு என்று அவன் ஏற்றுக் கொள்கிறான். இப்படிச் செய்த தவற்றை அவன் உணர்வதால் உடனே வாழ்க்கை அவனுக்கு சார்லட்டை பரிசாக அளித்துப் பாராட்டுகிறது.

இப்போது டார்சிக்கு வருவோம். லிசிக்கு அவன் proposal கொடுத்த விதம் அவளிடமிருந்து அவனை விலகிப் போகச் சென்றாலும் கதையில் வருகின்ற எதிர்பாராத திருப்பங்களின் விளைவாக அதே லிசி அவனை மீண்டும் proposal கொடுக்கச்

சொல்லி அழைக்கிறாள். தான் திருமணம் செய்து கொள்ளக்கூடிய கடைசி ஆள் இவனாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லிய அவள் தனக்குத் தெரிந்த மிகச்சிறந்த gentleman இவன்தான் என்று முடிவை மாற்றிப் பேசுமளவிற்கு அவன் தன்னைத் திருத்திக் கொள்கிறான். லிசி தன்னை மீண்டும் வரவேற்பதற்கு வாய்ப்பே இல்லை என்ற அளவிற்கு அவளோடு இருந்த உறவைக் கெடுத்துக் கொண்டவன் அவளைத் தேடி அவளே தன் வீட்டிற்கு வருமளவிற்கு டார்சி தன்னைத் தானே திருத்திக் கொள்கிறான். உணர்ச்சிவயப்பட்டு செயல்படுகின்றவர்கள் தான் என்ன தவறு செய்தோம் என்பதை உணர்ந்து திருந்தினார்கள் என்றால் இந்த தவறுகளினால் வரும் நஷ்டம் மற்றும் சிரமங்களிலிருந்து அவர்கள் தன்னை காப்பாற்றி கொண்டு தான் அடைய விரும்பிய நல்ல பலன்களை அடையலாம் என்பதற்கு டார்சியின் வாழ்க்கையே நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இப்பொழுது லிசிக்கு வருவோம். எந்த reservationஉம் இல்லாமல் அவள் விக்காமை ஏற்றுக் கொண்டது அவள் செய்த தவறுதான். கரோலின் எச்சரிக்கை செய்த பிறகும்கூட அவள் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை. தன்னை விட்டுவிட்டு மிஸ். கிங் பக்கம் போய்விட்டான் என்று தெரிந்த பிறகும்கூட வசதி உள்ள பணக்கார பெண்ணை மணந்தால்தான் அவனுக்கு நல்லது என்பதால் அவன் செய்வது தவறில்லை என்று அவள் பேசினாள். இருந்தாலும் கடைசியில் டார்சி விக்காமின் உண்மையான சொரூபத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த பின்னர் அவன் மேல் உள்ள பிரியத்தைக் கைவிடுகிறாள். பிங்கிலி ஜேனை விட்டு விலகிச் சென்றதற்குக் காரணம் தன் குடும்பத்தாருடைய மட்டமான செயல்பாடுதான் என்பதையும் ஏற்கிறாள். அவள் சின்சியராகத் தன்னைத் திருத்திக் கொண்டதால் ஜேன் மற்றும் பிங்கிலியின் திருமணத்திற்குத் தடையாக இருந்த டார்சி தன் மனதை மாற்றிக் கொண்டு ஜேனுடன் பழகுவதற்கு



மறுபடியும் சம்மதம் கொடுக்கிறான். தடைபட்ட அக்காவின் திருமணம் இப்போது கூடிவருவதால் டார்சி மேல் இருந்த அதிருப்தி லிசிக்கு போய்விடுகிறது. அதனால் மீண்டும் அவனது proposalஐ வரவேற்கிறாள்.

லிடியாவின் உணர்ச்சிவயப்பட்ட செயல்பாடு அவளை லண்டன் தெருக்களில் அனாதையாக விட்டிருக்கும். அவள் ஓடிப்போனதால் பென்னட் குடும்பத்தாருடைய மானமும், பெயரும் கெட்டுப்போயிருக்கும். ஆனால் தக்க சமயத்தில் டார்சி சமயோசிதமாக செயல்பட்டு லிடியாவை விக்காம் முறையாக திருமணம் செய்து கொள்ளும் அளவிற்கு நிலைமையை மாற்றி ஒரு பாஸிட்டிவ் முடிவைக் கொண்டு வருகிறான். இருந்தாலும் லிடியாவின் செயல்பாட்டால் குடும்பத்திற்கு வந்த ஆபத்து பெரிய ஆபத்துதான். லிசிக்கு கடிதம் வந்த சமயம் டார்சி அங்கு வந்திருக்காவிட்டால், அப்படியே வந்திருந்தாலும் இவள் ஒன்றுமே சொல்லாமல் கிளம்பியிருந்தாலும் விளைவுகள் விபரீதமாக இருந்திருக்கும்.

டார்சியும், லிசியும் பழகுவதை காதரீன் டீ பர்க் எதிர்த்திருந்தாலும் இறுதியில் டார்சியை லிசி திருமணம் செய்து கொண்ட பின்னர் காதரீன் டீ பர்க் லிசிக்குரிய மரியாதையை வழங்கி சமாதானம் செய்துகொள்வதாக கதையில் எழுதப்பட்டுள்ளது.

இந்த கதையில் வருகின்ற ஒரே ஒரு கதாபாத்திரம்தான் உணர்ச்சிவயப்பட்டு செயல்படுவதிலுள்ள ஆபத்தை உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதாகத் தெரிகிறது. விக்காமுடன் ஓடிப் போக வேண்டுமென்று அவள் நினைத்ததென்னவோ உண்மைதான். ஆனால் கடைசியில் தான் இப்படி திட்டம் போட்டிருப்பதெல்லாம் தன் அண்ணனிடம் ஒளிவு மறைவில்லாமல் தெரிவித்து, அண்ணனால் தடுத்து நிறுத்தப்பட்டு, தனக்கு

வரவிருந்த ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறாள். ஜார்ஜியானாவைப் போல் நாமும் உணர்ச்சிவயப்பட்டு செயல்பட விரும்பும்பொழுதெல்லாம் கடைசி நேரத்திலாவது அதன் ஆபத்தை உணர்ந்து நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அறிவுள்ள வகையில் செயல்பட்டோம் என்றால் வீண் பிரச்சனை மற்றும் சிரமங்களிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளலாம்.

*முற்றும்.*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் கடந்த கால வலிமையை அறிந்தாலும், குறைகள் இன்றைய நிலையை அளித்தது என உணருவ-தில்லை. குறைகள் நம்மை அழித்தன. நம் தலை மீது கொடுமையைக் குவித்தன. அதுவே நம்மை இந்நிலைக்குக் கொண்டு வந்தது.

***வறுமைக்கு வருத்தபடாத நிலை நன்றியறிதல்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அது போன்ற எதிர்காலப் பண்பு யாரென்று தெரியாமல் செயல்படுவதாகும். எந்தச் சரக்கு நம்மிடம் இருந்தால் நாம் யாரென வெளியில் தெரிய முடியாதோ, அதுவே பகவான், அன்னை யுகத்திற்குரிய சின்னம்.

***இரகஸ்யமான விளம்பரம்.***



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

211. *சாண் ஏறினால் முழம் சறுக்கும்.*

**சாண் ஏற முயன்றால், முழம் ஏறுவோம்.**

212. *வாயுள்ள பிள்ளை பிழைக்கும்.*

**வாயைத் திறந்தால் பிழைப்பு போகும்.**

213. *ஏழைக்கு இராஜ வைத்தியம்.*

**ஏழையென்பதால் இராஜ கவனம் உண்டு.**

214. *மயிலே, மயிலே என்றால் இறகு போடாது.*

**மயிலைக் கெஞ்சினால் அத்தனை இறகையும் போடும்.**

215. *ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்ட வேண்டும்.*

**எல்லையைக் கடந்தபின் அளவு கூடாது.**

*தொடரும்....*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மேல் மனத்தின் எந்நிலையிலிருந்தும் அழைப்பது நம் முயற்சி. அதைத் தாண்டினால் அழைப்பு நிற்காது. தானே எழும்.

***தானே எழும் அழைப்பு உள் மனத்திற்குரியது.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXI. The Ascent of Life

This is a significant development. Page No.204
It is of the increasing predominance Para No.8
of Mind.
It has its own law.
It imposes it on the material existence.
It is so more and more.
The Mind is subtle.
It has to assimilate.
For that it needs not devour.
It possesses and grows.
Mind gives more.
The more it grows.
It fuses into others.
It fuses others into itself.
This too is above.
It increases its scope of being.
Physical life too gives.



## 21. உயரும் வாழ்க்கை

இது ஒரு முக்கியமான மாறுதல்.

மனத்தின் முக்கியத்துவம் உயரும் வகையிது.
அதற்கேயுரிய சட்டம் உண்டு.
ஜட வாழ்வை அதற்குட்படுத்துகிறது.
அதன் அளவு அதிகரித்தபடியிருக்கிறது.
மனம் சூட்சுமமானது.
மனம் மற்றதைத் தனதாக்கிக் கொள்ள வேண்டும்.
விழுங்கியே அதைச் சாதிக்க வேண்டிய அவசியமில்லை.
மனம் மற்றதை ஏற்று, கலந்து, வளர்கிறது.
மனம் அதிகமாகக் கொடுக்கிறது.
எவ்வளவு கொடுக்கிறதோ அவ்வளவு வளர்கிறது.
பிறருடன் இணைகிறது.
பிறரைத் தன்னுடன் இணைக்கிறது.
இதுவும் முன் போலவே நடக்கிறது.
மனம் தன் ஜீவனின் வீச்சை வளர்க்கிறது.
ஜட வாழ்வும் கொடுக்கிறது.

It exhausts by itself.
Too much giving ruins physical life.
Too much devouring too ruins it.
Mind leans on the law of Matter.
It suffers the same limitation.
It can propose to grow into its own law.
It overcomes this limitation in proportion.
In that measure there is a change.

Then giving and receiving become one.
There is the upward ascent.
There the rule of unity acts.
It is a law of differentiation.
It is a divine law.
It is the law of the manifest Sachchidananda.

There is a second term of the original status of life. Page No.204 Para No.9
It is subconscious will.
It is a secondary status.
It becomes hunger and conscious desire.
They are the first seeds of mind.
Life grows into the third status.
It does so by a principle.
It is one of association, the growth of love.
It does not abolish the law of desire.
But rather it transforms and fulfils it.
Love has a nature.



அதனால் களைத்துப் போகிறது.
அதிகமாகக் கொடுப்பது ஜட வாழ்வை அழிக்கும்.
அதிகமாக விழுங்குவதாலும் ஜட வாழ்வு அழிகிறது.
மனம் ஜட வாழ்வைப் பாராட்டலாம்.
மனம் அதனால் ஜட வாழ்வின் அளவால் சுருங்கும்.
தன் சட்டத்தையே மனம் கருதலாம்.
அந்த அளவுக்கு இந்தத் தடையை மீறும்.
எந்த அளவுக்கு இதை கடந்து வருகிறதோ அந்த அளவுக்கு மாறுதல் உண்டு.
அப்பொழுது கொடுப்பதும் பெறுவதும் ஒன்றே.
வாழ்வு மேலெழுந்து உயருகிறது.
அங்கு ஐக்கியமான சட்டம் செயல்படுகிறது.
அது பிரியும் சட்டம்.
இது தெய்வீக சட்டம்.
இது சச்சிதானந்த சிருஷ்டியின் சட்டம்.

வாழ்வின் முதல் நிலைக்கு இரண்டாம் கட்டம் உண்டு.

இது ஆழ் மன உறுதி.
இது இரண்டாம்பட்சமான நிலை.
இது பசியாகவும், தன்னையறியும் ஆசையுமாகவும் மாறும்.
அவை மனத்தின் முதல் வித்து.
வாழ்வு மூன்றாம் கட்டத்திற்கு உயர்கிறது.
அது ஒரு சட்டப்படி நடக்கிறது.
ஒத்துழைப்பு, அன்பு வளர்வது அச்சட்டம்.
அது ஆசையின் சட்டத்தை அழிப்பதில்லை.
வாழ்வைத் திருவுருமாற்றிப் பூர்த்தி செய்கிறது.
அன்புக்குரிய சுபாவமுண்டு.

It is a desire to give oneself to others.

It desires to receive others in exchange.
It is a commerce between being and being.
Physical life does not desire to give itself.
It desires only to receive.
It is true it is compelled to give itself.
There is a life which only receives.
Life that does not give must be barren.
It must wither and perish.
If indeed such life is possible at all.
Either here or any other world.
But it is compelled, not willing.
It obeys the subconscious impulse of Nature.
Rather than consciously shares in it.
Love intervenes.
The self-giving at first still preserves.
There is the subconscious will in the atom.
To a large extent it has a mechanical character.
Love itself at first obeys the laws of hunger.
It enjoys receiving.
Rather than giving and surrendering to others.

It admits it chiefly as a price.
A price for the thing it desires.
Here it has not attained its true nature.
Its true law is to establish an equal commerce.



அன்பு கொடுக்கப் பிரியப்படுகிறது. பிறருக்குத் தன்னை வழங்குகிறது.
பிறரைத் தான் பெறப் பிரியப்படுகிறது.
ஜீவன்கட்குள்ள பரிவர்த்தனை அது.
ஜட வாழ்வு கொடுக்கப் பிரியப்படுவதில்லை.
அது பெற மட்டும் பிரியப்படுகிறது.
அதைக் கொடுக்கக் கட்டாயப்படுத்துவது உண்மை.
பெறும் வாழ்வுண்டு.
கொடுக்க முடியாதது வறண்ட வாழ்வாகும்.
அது வாடி வதங்கி அழியும்.
அப்படிப்பட்ட வாழ்விருக்குமெனில்,
பூமியில் அல்லது வேறெங்கும் அது இருக்குமானால்,
அது கட்டாயப்படுத்தப்படுகிறது, அதற்குப் பிரியமில்லை.
இயற்கையின் ஆழ்மன சுபாவத்தை அது ஏற்கிறது.
அறிந்து செய்யாமல் தன்னையறியாமல் செய்கிறது.
அன்பு குறுக்கிடுகிறது.
அர்ப்பணம் பெரும் அளவுக்கு தொடர்கிறது.
அணுவில் ஆழ்மன உறுதியுண்டு.
பெரும் அளவு அது ஜீவனற்றது.
முதலில் அன்பும் பசியின் சட்டத்தை ஏற்கிறது.
பெற விரும்புகிறது.
கொடுப்பதையும் பிறருக்கு சரணடைவதையும்விட பெற விரும்புகிறது.
கொடுப்பதை ஒரு நிபந்தனையாக ஏற்கிறது.
பெறுவதற்கு விலையாக அதை ஏற்கிறது.
இப்பொழுது அதன் உண்மை சுபாவம் எழவில்லை.
சமமாக இருக்கும்படி செயல்படுவதே அதன் உண்மையான சட்டம்.

There is joy of giving equal to joy of receiving.
In the end it tends to become greater.
But that is when it is shooting beyond itself under Psychic pressure.
It is to attain to the fulfillment of utter unity.
Therefore it sees the not-self as its own individuality.
There is the law of love.
It has a character in its origin.
It is the impulse to realise and fulfil in oneself others.
And by others to be enriched by enriching.

It is a desire to possess.
It is a desire to be possessed.
Without being possessed one does not possess oneself utterly.

*Contd....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

அகந்தை அழிந்தால் நாம் சிருஷ்டியின் ஆன்மாவை அடைகிறோம். அறியாமை தெய்வ மனதில் எழுகிறது. அகந்தை இயற்கையின் சக்தி.

***அறியாமை, அறிவு தன்னுள் தானே மறைவதால் எழுவது.***



அங்கு கொடுப்பதும் பெறுவதும் சமமாக இனிக்கும்.
முடிவாக அடுத்த கட்டத்திற்கு வளரும்.
சைத்திய புருஷனானால் அதன் வேகத்தால் தன்னை மீறி செயல்படுகிறது.
பூரண ஐக்கியம் பெற விழைகிறது.
அதனால் அசத்தை தானேயென உணர்கிறது.

அன்பின் சட்டம் உண்டு.
மூலத்தில் அதற்குரிய சுபாவமுண்டு.
பிறரில் தன்னைப் பூர்த்தி செய்யும் அவா அது.

பிறரால் பேறு பெற்று பெறுவதால் இருவரும் உயரும் சட்டம் அது.
பிறரை ஆட்கொள்ளும் அவா அது.
பிறர் தன்னை ஆட்கொள்ள விழைவது அது.
தன்னைப் பிறர் ஆட்கொள்ளாமல் தான் தன்னை முழுவதும் ஆட்கொள்ள முடியாது.

*தொடரும்......*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உணர்வின் சத்தியக் கருத்து உற்பத்தியாக உணர்வின் சக்தி தன்னையறிந்து உணர்வோடு இணைந்து முழுமை பெற்று, உணர்வும் சக்தியும் ஒன்றையொன்று வலியுறுத்த முடிய வேண்டும்.

***சக்தியின் உணர்வு சத்தியஜீவியமாகும்.***

## இம்மாதச் செய்தி

# அகந்தை அழியாமல்

# மோட்சம் பெறலாம்.

# அகந்தை அழியாமல்

# பூரணயோகம்

# ஆரம்பிக்க முடியாது.





## P.126 A flaming thunder, a creator flash

**பொறி தெறிக்கும் இடியோசை, சிருஷ்டியின் மின்னல்**

☆ வெற்றி பெற்ற ஜோதி அழிய முடியாத சக்தியை வாகனமாக்கியது;

☆ பூதம் தெய்வத்தை ஏந்தித் தாவியது.

☆ மனமெனும் கிரீடம் பெற்ற வாழ்வு ராஜ கம்பீரம் பெறுகிறது.

☆ வலிமை பெருமை தரும் மகிழ்வு நிறை உலகம்

☆ கனவுலக கலகலப்பான எண்ணமிகு செயல்,

☆ ஆசைக்குக் காத்திருக்கும் அதிதீவிரம்

☆ ஆண்டவன் அணுகி வருவதைக் கேட்டுணர்ந்தது.

☆ சிறு குழந்தையின் களங்கமற்ற மகிழ்வு நிறை லோகம்;

☆ எதையும் கருதாத இதயமும் மனமும் பெற்ற இளமை

☆ மனித உடலை ஆண்டவனின் அற்புதக் கருவியாக்கியது;

☆ ஆசைக்கும் அது அற்புத ஜொலிப்பு தருகிறது

☆ தெய்வீக விலங்கிற்கு வழங்கிய சுதந்தரம்

☆ அன்பும் அழகும் ஆனந்தமும் ஓடியாடும் தெய்வீகம்.

☆ பளபளக்கும் பாதை பரமண்டலத்தை நோக்கிப் புரியும் புன்னகை

☆ வாழ்வு உந்திய வேகம் தங்கு தடையின்றி ஓடியது:

☆ களைப்பு அது அறியாதது; கனிவின் கண்ணீர் மகிழ்ந்து பெருகும்.

☆ விளையாட்டே வேலை, வேலை மட்டுமே ஆட்டம்,

☆ தெய்வ வலிமையின் ஆட்டம் சொர்க்கத்தின் கடமைகள்:

☆ தூய்மையான மது தெய்வீக சோமபானம்,

☆ மனிதரறியும் மந்தமறியாத பானம்

☆ காலத்தின் வாழ்வு அனந்தத்தின் ஆனந்த பூரிப்பு

☆ வயோதிகம் வர மறுத்தது, கவலையின் சுவடை முகமறியாது.

☆ வானுலக நிரந்தர வயப்பட்ட வழக்கு

☆ நித்தியமான வலிமையின் ஓட்டப்பந்தய ஓலமெனும் சிரிப்பு,

☆ நிர்வாண தெய்வீகக் குழந்தைகள் விளையாட்டரங்கில் ஓடின

☆ அற்புத வேகம் தாக்கிய காற்றின் ஓட்டம்;

☆ புயலும் கதிரவனும் புகழ்பெற்ற நண்பர்கள்,

☆ வெண்ணிற நுரையின் வேகம் நிறை ஆட்டம்,

☆ மிதிபட்டிறந்த தூரத்துத் தோற்றம்

☆ சக்தி தாக்கும் அரங்கின் மல்யுத்தம்.

☆ ஆதவன் ஆக்ரமிக்கும் ஒளிமலையின் அலைவேகம்

☆ உடல் பெற்ற உணர்வு தூண்டும் உயர்லோக சுவர்க்கம்

☆ இறைவன் இறைத்து மகிழும் பெரும் பரிசின் பெருவெள்ளம்.

☆ ஆனந்தம் மந்திரமாகத் தாக்கும் இதயத்தின் கட்டு,

☆ கவர்ச்சியின் மாட்சி பெற்ற பெருமையின் பேறு

❋❋❋





# அன்னையின் தரிசனம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

அடக்கம், அன்பு, செயல்திறன், பிரதிபலன் பாராத உழைப்பு, இன்னும் இதுபோன்ற அவள் உயர் பண்புகள் அகந்தைக்குத் (சாமான்யருக்கு வேலைக்காரியாய்) தொண்டு செய்வது கண்டு, அதனின்றும் அவளை விடுவிக்கவே தம்மிடம் இருத்திக் கொண்டார். இதுதான் அவள் அன்னையிடம் வந்த விதம்.

அன்னை யாருக்கு எதைச் சொன்னாலும் அதில் தனக்கு ஏற்றதைத் தவறாமல் பின்பற்றுவாள். அவள் எதைச் செய்தாலும், மற்றவர்களுக்கு வியப்பாயும், சில நேரங்களில் அர்த்தமற்றதாயும் கூடத் தெரியும். ஆனால் அவள் இயல்பறிந்த நுட்பம் புரிந்தவர்க்கே அது விளங்கும். அப்படி அவளை அறிந்தவர் அன்னை ஒருவரே.

ஒரேயொரு நிகழ்ச்சி மூலம் அவள் அன்னையை எப்படி நேசிக்கிறாள் என்பதை விளக்குவதே இக்கதை.

இளம்பெண். பெருமைக்கு ஆசைப்படாதவள். பொறுமைசாலி. விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவள். அனைவர்க்கும் குற்றேவல் செய்யும் குணக்குன்று. அன்னையின் சூழலே தன் வாழ்வின் இலட்சியம் என்று எண்ணி, அங்கு பணி செய்து கொண்டு மகிழ்வுடன் வாழ்பவள்.

இரவு ஏழு மணிக்கெல்லாம் பெண்கள் மலர்த் தட்டுகளுடன் அன்னையின் தரிசனத்திற்குக் காத்திருப்பது வழக்கம். பிரபாவதி தனக்கிடப்பட்ட பணிகள் எதுவாயினும் அதை உரிய முறையில் செய்து முடித்துவிட்டு அன்னையின் தரிசனத்திற்குக் காத்திருக்க வந்துவிடுவாள். நாள் தவறாமல் முதன்முதலில் வருபவள்

அவள்தான். ஏனெனில் சில நாட்களில் அன்னை தியானம் கலைந்து தரிசனம் கொடுக்க மிகுந்த நேரமாகிவிடும். ஒரு முறை இரவு நெடுநேரம் ஆனதால் பகவானே வந்து இவர்களைத் திருப்பி அனுப்பியும் உள்ளார்.

ஒரு முறை நேரமாகிக் கொண்டேயிருந்தது. ஒரு முதிய பெண்மணி பொறுமையின்றி கதவைச் சிறிது திறந்து, தமது பூத்தட்டை எதிரிலிருந்த அலமாரியில் வைத்துவிட்டுப் போகக் கிளம்பினார். ஓரிளம் பெண்ணோ அவரிடம், ''சற்று நேரம் பொறுத்திருங்கள். இதோ அன்னை வந்துவிடுவார்'' என்று அவரைத் தடுத்துப் பார்த்தார். அவரோ இளம்பெண் மீது எரிச்சல் கொண்டு முறைத்துவிட்டுப் போய்விட்டார். இளம்பெண் கூறியது போலவே சிறிது நேரத்தில் அன்னை கதவைத் திறந்துவிட்டார். ஒவ்வொருவராக அன்னையிடம் ஆசி பெற்றுத் திரும்பினர்.

இறுதியாகச் சென்ற அந்த இளம்பெண்ணிடம், ''யாரிந்தப் பூத்தட்டை இங்கே வைத்துச் சென்றது?'' என்று கம்பீரமாய்க் கேட்கிறார் அன்னை. அப்பெண் ஒன்றும் கூறாது நிற்கிறாள்.

''எனக்குத் தெரியும். எல்லோருடைய பூத்தட்டுகளையும் எனக்கு அடையாளம் தெரியும். எனக்காகச் சிறிது காத்திருக்க உங்களுக்குப் பொறுமையில்லையா? தேவ, தேவியர்கள்கூட எனக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ரிஷிகள், முனிவர்கள் தங்கள் தியானத்தில் ஒரு கண நேரம் என்னைக் கண்டால்கூட தங்களைப் பாக்கியசாலிகள் என்று கருதுகிறார்கள். நீங்கள் எல்லோரும் மிகவும் எளிதாக என்னை அடைகிறீர்கள் என்பதால் அதற்கு நீங்கள் மதிப்புத் தருவதில்லை'' என்று கூறினார்.

அதற்கு அப்பெண், ''தேவர்களும், முனிவர்களும் நீங்கள் ஆதிசக்தி என்பதை அறிந்துள்ளார்கள். நாங்கள் உங்கள் எளிய குழந்தைகள். உம்மை நாங்கள் பிரியநண்பராக, உரிமையுடன் அன்னையாகவே காண்கிறோம். எங்கள் அறியாமையைப் பொறுத்தருளும்'' என்று கூற, அப்பெண்ணை அன்னை



கட்டியணைத்துக் கொண்டார்.

வெளியில், தரிசனம் முடித்த பின்னும் பிரபாவதி நின்று கொண்டு தரிசனம் பெற்று வருபவர் மகிழ்வைக் கண்டு மகிழ்வது வழக்கம். அன்று அந்த இளம்பெண் அன்னையிடமிருந்து வெளிவர தாமதமானதால் பிரபாவதி நின்று கொண்டிருந்தாள். வெளியில் வந்த இளம்பெண், ''நீ இன்னும் நின்று கொண்டிருக்-கிறாயா? வா, போவோம்'' என்று கூறி, சேர்ந்து வரும்போது மேற்படி நிகழ்ச்சியைக் கூறினாள். பிரபாவதி மிகுந்த பக்தியுணர்வால் தேம்பி அழவாரம்பித்துவிட்டாள். இதற்குப் பிறகு அவள் மேலும் ஆர்வத்துடன் தரிசனத்திற்குக் காத்திருக்கத் தொடங்கிவிட்டாள்.

அன்றும் அப்படித்தான், தனக்கிடப்பட்ட பணிகளைக் குறைவறச் (குறைவு+அற) செய்துவிட்டு முன்னதாக வந்து நின்றுவிட்டாள்.

ஒரு ஆசிரமத்துச் சகோதரி அவளிடம், ''பிரபா, நீதானே தினமும் முதலில் தரிசிக்கிறாய். இன்று உன்னிடத்தை எனக்கு விட்டுக்கொடுக்கக் கூடாதா?'' என்றாள்.

''ஓ! தாராளமாக. நீயே முதலில் நின்றுகொள்'' என்று அவளுக்கு இடம் கொடுத்துத் தான் அடுத்ததாக நின்றாள். மற்றுமொரு சாதகி தான் அவளிடத்தில் நிற்க அனுமதி கேட்டாள். ஒரு முதிய பெண்மணி தன்னால் நீண்ட நேரம் நிற்க முடியவில்லை என தன்னை முதலில் அனுமதிக்கச் சொன்னாள். இப்படியாக அவள் நகர்ந்து இடம் விட்டு, இடம் விட்டு வரிசையின் இறுதிக்கே வந்துவிட்டாள்.

ஒரு சாதகர் அன்னையின் அறைவாயிலில் எப்போதும் காத்திருப்பார். அன்னையின் அழைப்பிற்கு உடனே செல்பவர். அவர், என்றும் பிரபாவதி தவறாமல் வந்து நிற்பதை அறிவார்.

இன்று அவள் வரிசையின் இறுதிக்குத் தள்ளப்பட்டதைக்

கவனித்துக் கொண்டுதானிருந்தார். அவள் சாத்வீகக் குணத்தை எல்லோரும் இப்படிப் பயன்படுத்துகிறார்களே என்று அவருக்கு உள்ளூர வருத்தம். ஆயினும் அவளுடைய விட்டுக்கொடுக்கும் தன்மையும், அவள் பொறுமையும் அவரை வெகுவாகக் கவர்ந்தது. அன்று அன்னை மிகத்தாமதமாகவே கதவைத் திறந்தார்.

ஒவ்வொருவராக உள்ளே சென்று அன்னையை தரிசித்து, ஆசி பெற்று, மலர்ச்சியுடன் வெளிவருவதைக் கண்டு மகிழ்ந்தவண்ணம் நின்றிருந்தாள் பிரபாவதி. ஆனால் என்ன சோதனை! அவள் முறை வரும்போது அன்னைக்குத் தியானம் கூடிடவே அவளை உள்ளே அனுமதிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இனி எப்போது கதவு திறப்பாரோ? கதவைச் சார்த்திவிட்டுச் சாதகர் வெளியே அமர்ந்துவிட்டார். அன்னை உத்தரவு தந்தபிறகே அவர் போவார்.

பிரபாவதிக்குத் தரிசனம் கிடைக்கவில்லையே என்று அவருக்கு மிகவும் வருத்தம். எவ்வளவு பொறுப்பாக முன்னால் வந்து நிற்கிறாள்! பொறுமையாக எல்லோருக்கும் விட்டுக் கொடுத்தாளே, அவளுக்கா தரிசனம் கிடைக்கவில்லை. மனம் அவளுக்காக மிகவும் வருந்தியது. "சகோதரி, மிகவும் ஏமாற்ற-மடைந்தாயோ? நீ ஏன் ஒவ்வொருவராக உன் இடத்தை விட்டுவிடக் கேட்டபோது சம்மதித்தாய். நாளை முதலிலேயே நின்றுவிடு'' என்றார் ஆறுதல் கூறும் பாவனையில்.

அவள் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் சிறிதுமில்லை. தரிசனம் செய்தவர்களைவிட அவளே மலர்ச்சியாக இருந்தாள்.

''பரவாயில்லை அண்ணா, எல்லோருக்கும் கிடைத்தது எனக்கும் கிடைத்ததுபோலவே சந்தோஷமாய் உணர்கிறேன்'' என்று தெளிவாய்க் கூறி, பொறுமையாய்ச் சென்றாள். இனி அன்னையைத் தொந்தரவு செய்யக்கூடாது. அவரே விடியற்-காலையிலிருந்து நம்பொருட்டு ஓயாது உழைக்கிறார் என்று எண்ணினாள்.



தன்னறைக்குத் திரும்பியவள், மேசை மீது வைத்திருந்த அன்னையின் திருவடிகளைப் பார்த்தவண்ணமிருந்தாள். "அன்னையே, நீர் எப்போதும் என் இதயத்திலேதான் வசிக்கிறீர். என்றாலும் நான் உம்மைப் புறத்திலும் காண ஆர்வங் கொள்கிறேன். அதனாலன்றோ உம் தரிசனத்திற்கு முதலில் நிற்கிறேன். என்றாலும் உம் தரிசனம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் எனக்கில்லை. உமக்காகக் காத்திருப்பதில்தான் எத்தனை மகிழ்ச்சி உண்டாகிறது. மீண்டும் நாளையும் வருவேன். உம்பொருட்டு நான் வாழ்நாள் எல்லாம் காத்திருப்பேன். எனக்கு ஏமாற்றம் இல்லை, மகிழ்ச்சியே. ஏனெனில் இதுவும் உம் சித்தமே. உம் சித்தப்படியே நடப்பது மகிழ்ச்சி தருவதல்லவா!'' என்று எண்ணியவண்ணம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

அரை மணிக்கும் மேலாகியிருக்கும். கதவு தட்டும் ஒலி கேட்டது. எழுந்து கதவைத் திறந்தாள். அந்தச் சாதகர் நின்றிருந்தார், முகங்கொள்ளாத பரவசத்துடன். ''பிரபாவதி, நீ பாக்கியசாலிதான். அன்னை உன்னை அழைத்து வரச் சொன்னார்" என்றார்.

இவளுக்குத் தரிசனம் இல்லையே என்று இவளைவிடவும் அவர்தான் வருந்தினார். எனவே, இப்போது மகிழ்வுடன் அழைத்துப் போக வந்தார்.

பிரபாவதி, "இதோ வந்துவிட்டேன் அண்ணா" என்று உடனே புறப்பட்டாள். ஆனால் அவள் நிதானமிழக்கவில்லை.

"நல்லவேளை, நீ இன்னும் உறங்கப் போகவில்லை. உனக்கு அதிர்ஷ்டம்தான்'' என்றார். ஆனாலும் அவருக்கு உள்ளூர வருத்தம். மணிக்கணக்காய் நின்ற குழந்தையின் முறை வரும்போது அவளுக்குத் தரிசனம் தாராது ஏன் தியானம் மேற்கொண்டார். இப்பொழுது ஏன் அவளை அழைக்கிறார். அவருக்கும் என்போல் மனம் கேட்கவில்லையோ என்று சிந்திக்கிறார்.

முன்பே ஒரு முறை இந்தச் சாதகரிடம் அன்னை, ''நீ என்னை மானிட வடிவில் காண்கிறாய். இவ்வடிவம் மட்டுமே உன் கண்ணில் படுகிறது. நான் ஒரு மனிதப் பிறவி என்பது போலவே என்னுடன் பழகுகிறாய், வேறொன்றுமில்லை" என்று கூறியுள்ளார். அதற்கேற்பவே அவர் சிந்தனை அமைந்திருக்கிறது.

அன்னையின் அறையின் முன் சென்றவுடன் சாதகர், "அன்னையே, இதோ பிரபாவதியை அழைத்து வந்துவிட்டேன்" என்றார்.

''உள்ளே வா" என்று தலையசைத்தார் அன்னை.

பிரபாவதி அவர் முன் வந்து பணிவுடன் நின்றாள். அன்னை என்ன சொல்லப்போகிறார் என்று ஆவலுடன் சாதகர் பார்த்து நின்றார்.

''பிரபாவதி, நான் உன்னை ஏமாற்றிவிட்டேனா?'' என்று அன்பு பொங்கக் கேட்டவண்ணம் அவள் தோளைப் பற்றினார். உடல் சிலிர்த்தது அவளுக்கு.

''இல்லை அன்னையே, நீர் ஏமாற்றவில்லை. நீர் ஒருபொழுதும் ஏமாற்றமாட்டீர்" என்று உருக்கமாகக் கூறினாள்.

அன்னை சாதகரைக் கடைக்கண்ணால் பார்த்தவண்ணம் மேலும் அவளிடம் உரையாடுகிறார்.

''அப்படியென்றால், நீ எனக்காக ஆர்வத்துடன் காத்திருக்கவில்லையா?" என்றார்.

''ஆம் அன்னையே. உமக்காகத்தான் காத்திருந்தேன். உமக்காக மட்டுமே காத்திருப்பேன்" என்றாள்.

''அப்படியென்றால், உனக்கேன் என் தரிசனமில்லாதது ஏமாற்றமளிக்கவில்லை?"

சாதகர் மனமும் இதே கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருந்தது. பிரபாவதி என்ன சொல்லப்போகிறாள் என்பதை ஆவலுடன் கவனிக்கிறார்.



''உமக்காகக் காத்திருப்பதும் இன்பமில்லையா? உமக்காக தேவ, தேவியரும், ரிஷிகளும், முனிவரும் காத்திருக்கவில்லையா? நீரே முன்பு இவருக்கு (அருகிலிருந்த சாதகரை குறிப்பிட்டு) கூறிய ஒரு பதிலிலும் அதை நான் அறிந்தேன்" என்றாள்.

சாதகருக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்னிடம் எப்போது அன்னை காத்திருக்கச் சொன்னார் என்று புரியாமல் விழித்தார்.

"நான் எப்போது சொன்னேன்? என்ன சொன்னேன்?" என்று ஒன்றும் புரியாதவர் போல் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு சாதகரைக் கடைக்கண்ணால் பார்க்கிறார் அன்னை.

அவரும் ஒன்றும் புரியாமல் அவள் கூறப்போவதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்.

''ஆம் அன்னையே. நீர் யாரிடம் என்ன சொன்னாலும் நானும் அதை எனக்கும் கூறியதாகவே கொள்கிறேன். இவர், முன்பொரு முறை உம்மிடம் உமக்கு மிகவும் பிடித்த தியானமும் பிரார்த்தனையும் எது எனக் கேட்டபோது மார்ச்சு 7, 1915இல் எழுதிய பிரார்த்தனை என்று கூறவில்லையா?" என்றாள் பணிவாக.

"ஆமாம் கூறினேன். அதில் உனக்கென்ன பதில் கிடைத்தது" என்றார் ஒன்றும் புரியாதவர் போல்.

"நினது கருணை வேண்டுமென்றுகூட இரக்கமாட்டேன். நீ எதைச் சங்கல்பிக்கிறாயோ அதையே நானும் சங்கல்பிப்பேன்" என்று கூறியுள்ளீரே என்று நெகிழ்ந்து கூறினாள்.

சாதகர் இமைக்க மறந்து அவளை வியப்புடன் பார்க்க, அன்னை அவளைக் கட்டியணைத்துக் கொண்டார்.

உம்முடனேயே இருந்தும் இவள் அறிந்ததை நானறியாது போனேனே, உம் திருவிளையாடல் ஒன்றும் நானறியேன் அம்மா என்று மனம் கசிந்து நின்றார் அவர்.

*முற்றும்.*

❋❋❋

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 48. பொய்யின் உண்மையை ஏற்று, பொய்யை மெய்யாக்கும் திறன்

- ★ பொய்யை விலக்குவது கடினம்.
- ★ நம் பொய்யை விலக்குவது அவசியம், அது முடியும்.
- ★ பிறர் பொய் நம்மிடம் கூறுவதை விலக்கப் பிறரை விலக்க வேண்டும்.
- ★ உலக வாழ்வில் அது எளிமையாகச் செய்ய முடியாது.
- ★ உடன் பிறந்தவர், பிள்ளைகள், பெற்றோர் நம்மிடம் பொய் சொல்வதால் அவர்களை எப்படி விலக்குவது?
- ★ **பிறர் பொய் நம் பொய்யின் பிரதிபலிப்பு.**
- ★ ஆழத்தில் நம் பொய்யை விலக்கினால் அவர்களால் நம்மிடம் பொய் சொல்ல முடியாது.
- ★ ஆழம் என்பது அவரும் நாமும் இரத்த பாசத்தில் இணையுமிடம்.
- ★ வெளி மனிதரிடையே அது செய்வது சிரமம் குறைவு.
- ★ இரத்த பாசமில்லாத இடம் கடினமில்லை.
- ★ அவர் நமக்குத் தேவைப்பட்டால் அவர் பொய்யை விலக்க முடியாது.
- ★ **அவர் தேவைப்படுகிறது எனில் அவர் பொய் தேவைப்படுகிறது.**
- ★ எலிசபெத்திற்கு விக்காம் பொய் தேவைப்பட்டது, தேவாமிருதமாக இருந்தது.
- ★ ஆழம் அதிகமானால், பொய்யின் ருசி அதிகமாகும்.



- ★ பிறருடன் பழகினால் அவர் பொய் குறையும், பொய் மெய்யாக மாறும்.
- ★ அப்படி மாறிய இடத்தின் தொடர்பு பாதிக்காது.
- ★ மாறாத இடம் பாதிக்கும்.
- ★ அவை கலந்திருப்பதால், பிரித்து செயல்படுவது சிரமம்.
- ★ அவர் மாறிய மனநிலையை மட்டும் ஏற்றால் - அது மெய் - அது வளரும்.
- ★ அது பூரண மெய்யாகச் செயல்படும் திறன் வாய்ந்தது.
- ★ அது உலகுக்கு அதிர்ச்சி தரும்.
- ★ அதையும் சிறிது பொய்யான நம்பிக்கையால்தான் அவன் செயல்படுத்துவான்.
- ★ அச்செயல் தனிநபர் செயலல்ல.
- ★ அது பிரபஞ்ச செயலாகும்.
- ★ அதன் அடிப்படை உண்மையென்பதால் அது அகல, நீளத்தில் வளரும்.
- ★ **ஒருவர் செயலை உலகையாளும் என நிரூபிக்கும்.**
- ★ உலகம் முழுவதும் பரவியதும் உண்டு.
- ★ ஏழ்மை பொய் - உயிரில் பொய்.
- ★ அறியாமை பொய் - மனத்தின் பொய்.
- ★ நோயும் பொய் - உடலின் பொய்.
- ★ பொய்யை மெய்யாக மாற்றுவது பிறரைத் திருவுருமாற்றுவது.
- ★ திருவுருமாற்றம் மோட்சத்தைக் கடந்தது.
- ★ பிறரைத் திருவுருமாற்ற சத்புருஷனால்தான் முடியும்.
- ★ பிறரைத் திருவுருமாற்றும் தகுதி யோகத் தகுதி.
- ★ பொய் பணத்தால் வெளிப்பட்டால், அதன் சக்தியதிகம்.

- ★ பணத்தை பொய்யனிடம் கொடுத்து வாங்குவது அவன் பொய் மெய்யாக மாறுவது.
- ★ அவனே மாறிய பின்னும், பணம் பொய் சொல்ல வற்புறுத்தும்.
- ★ **பணத்தை திருப்பித் தரும் பொய்யன், பணத்தின் பொய்யை மீறி மெய்யை ஏற்பதாகப் பொருள்.**
- ★ பொய் வேறு, மெய்யின் தோற்றம் பெற்ற பொய் வேறு.
- ★ மெய்யின் தோற்றம் பெற்ற பொய் வலிமை மிக்கது.
- ★ பொய் தன் அளவில் திறன் பெற்று, மெய்யாகத் தோன்றும் திறனையும் பெற்றதால் அதன் வலிமையை சமாளிக்க முடியாது.
- ★ அதன் வலிமை வளைய, மெய்யின் சத்தியம் நிலை உயர்ந்து ஆன்மாவை எட்ட வேண்டும்.
- ★ மெய் ஆன்மாவின் அறம் என்பதால், அது அகமாக முயலும் பொழுது ஆன்மாவாகிறது.
- ★ அதன் முன் மெய்யாக நடிக்கும் பொய் ஜபம் பலிக்காது.

*தொடரும்.....*

❋❋❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்நிலைக்குரிய முறையும் முன்னிலையில் சுருக்கு வழியாகும். நிலைகளின் வேறுபாடு அதிகமானால் சுருக்கம் அதிகம்.

***முன்னிலையில் சுருங்கி, பின்னிலையில் விரியும்.***



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/26) சிந்தனைக்கு உரிமையில்லாத நேரம் மனம் ஓய்தல் ஒழிவில்லாமல் எதிர்பார்க்கிறது. வெளிவர முயலும் எண்ணம் உணர்வால் உந்தப்படும்பொழுது மனம் எதிர்பார்க்கும்.**

- ☆ **உலகம் தராத உண்மையை மனம் எதிர்பார்க்கும்.**

- ★ இல்லையென்பதை மனம் நாடும்.
- ★ மனம் நாடுவதை உணர்வு ஆமோதித்தால் நாடுவதை மனம் தேடும்.
- ★ மனம் ஏக்கமுற்றுத் தேடுவதை எதிர்பார்ப்பு என்கிறோம்.
- ★ ஞானம் நால்வகை.
  1. உயர்ந்த ஞானம் இறைவனோடு ஐக்கியமாகப் பெறும் ஞானம்.
  2. இறைவனிடமிருந்து பிரிந்து மனிதன் மேல் மனத்தால் அறிவது கடைசி கட்ட ஞானம்.
  3. அடிமனம் பெறும் பிரபஞ்ச ஞானம் அதனினும் உயர்ந்தது.
  4. யோகி பார்த்தவுடன் சிந்தனையின்றி, திருஷ்டியின்றி நேரடியாகப் பெறுவது ஐக்கியத்திற்கு அடுத்த உயர்ந்த ஞானம் (intuition).
- ★ எதிர்பார்ப்பது மேல்மனம்.
- ★ அடிமனத்தில் எதிர்பார்ப்பது குறைவு.

- ★ நேரடி ஞானம் எதிர்பார்க்க வேண்டியதை அறிவதால் எதிர்பார்ப்பு பெரும் அளவு கரைகிறது.
- ★ ஐக்கியம் அனைத்தையும் பெறுவதால் எதிர்பார்ப்பு அங்கில்லை.
- ★ ஜீவன் சத்புருஷன்.
- ★ அவன் சக்தியால் செயல்படுகிறான்.
- ★ ஜீவன் சக்தியால் செயல்படுவதை ஏற்று உருவகப்படுத்துவது ஜீவியம்.
- ★ மனத்திற்கு இவை புறநிகழ்ச்சி.
- ★ மனம் பெற்ற திறமைகள் மனநிலை, மனத்தின் உணர்ச்சி.
- ★ புறநிகழ்ச்சியால் ஏற்படும் அலை வெள்ளத்தால் மனநிலை மாறுகிறது.
- ★ மாறும் மனநிலை காலத்தால் இயங்கி, இடத்தில் செயல்படுகிறது.
- ★ இந்த இயக்கமும் செயலும் மனத்திலுள்ள பிரம்மத்தின் வெளிப்பாடுகள்.
- ★ அவை ஜீவனை எட்டுவது மனநிலை (பக்கம் 553 - *The Life Divine*).
- ★ டார்சியை எலிசபெத் நிராகரித்துவிட்டாள். அவன் மேல்மனம் நாடுவது கிடைக்கவில்லை.
- ★ நிராகரித்ததை டார்சி பொருட்படுத்தாது அவளுடன் ஆத்மாவில் ஐக்கியமாக முனைந்தான்.
- ★ காலத்திலும், இடத்திலும் தன்னுள் உள்ள பிரம்மத்தை நாடினால் ஐக்கியம் பெறலாம்.
- ★ அவன் மேல் மனத்தை விட்டகன்று, அடிமனத்தைக் கண்டு, நேரடி ஞானத்தை நாடாமல் - காலத்தையும் இடத்தையும் கடந்து - உள்ளே போனான். (அவன் லாங்பார்ன் போய் அவளை சந்திக்க முயலவில்லை - இடத்தைக் கடப்பது. அவளை எப்பொழுது சந்திக்கலாம் என்ற நினைவை விலக்கினான் - காலத்தைக் கடந்தான்).
- ★ காலம் அவளை அவனிடத்திற்குக் கொண்டு வந்து, அவனை ஒரு நாள் முன்னதாக வரவழைத்து, நேருக்கு நேர் அவளை - இடத்தில் நிறுத்தியது.
- ★ முடிவாக அவன் அவளுடன் ஐக்கியமானான்.
- ★ ஞானம் உயர்ந்தால் அறிவு சக்தியாக செயல்படுத்துகிறது.
- ★ எதிர்பார்ப்பு நெதர்பீல்டிலிருந்தது. அது மேல்மனம்.
- ★ ஹன்ஸ்போர்டில் மணக்க விருப்பம் தெரிவித்தது அடிமனம்.
- ★ பெம்பர்லியில் மேல்மனம், அடிமனம் செயலற்றவை என அறிந்து நேரடி ஞானத்தையும் கடந்து, ஐக்கியத்தை மனத்தால் நாடினான்.
- ★ ஐக்கிய ஞானம் அவளை அவனுடன் ஐக்கியப்படுத்தி விட்டது.

✲✲✲

**II/27) வெற்றியின் இரகஸ்யத்தை விரும்பி அளித்தால் இரகஸ்யம் வேண்டாம், வெற்றியைக் கொடு என்பார்கள். அவர்கட்கு நிரந்தரத் தோல்வி நிச்சயம்.**

> ☆ **தேடும் இரகஸ்யம் நாடி வந்தால் விலக்கி வெற்றியைக் கேட்பான்.**

- ★ வெற்றி பெற்றவன் அடுத்த வெற்றியைத் தேடுவதைவிட அடுத்தவர் பெறும் வெற்றியைத் தடுக்க அரும்பாடு படுவான்.
- ★ மனித சுபாவம் வெற்றி பெறுவதைவிட பிறர் தோல்வியை நாடுகிறது.

★ மனிதனைத் தோற்கடிக்க முனைந்த சிவபெருமானை மனிதனின் குதர்க்கம் தோற்கடிக்க தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை, பக்கத்து வீட்டுக்காரனுக்கு இரண்டு கண்ணும் போக முனைந்தான்.

★ வரம் கேட்கும் பக்தனுக்கு அவன் சிறுமையை உணர்த்த சிவபெருமான் உனக்குக் கிடைப்பது போல் பக்கத்து வீட்டுக்காரனுக்கு இரு மடங்கு கிடைக்கும் என்றார்.

★ வீடு, மாடு, செல்வம், பிரபலம் கேட்டவன் பெற்றான். பக்கத்து வீட்டுக்காரன் இரு மடங்கு பெற்றபொழுது வரமளித்த கடவுளைக் கடந்து மனித சுபாவமான பொறாமை பலிக்கும்படி அவன் கண் பார்வையை மனிதனால் பறிக்க முடிந்தது கதை.

★ இந்த உலகில் உலகைக் கடந்த வெற்றி பெறுபவரில்லை.

★ ஒருவர் பெற்றால் உலகம் அவரை உடனே பின்பற்றுகிறது.

★ அந்த இரகஸ்யத்தைப் பெற்றவன் பொன் போல பாதுகாப்பான்.

★ எவருக்கும் சொல்லமாட்டான்.

★ கொடுத்தால் மனிதன் மறுப்பான் என்பது மனித சுபாவம்.

★ பெற வேண்டியவர், பெற நெடுநாள் விழைந்து ஏக்கமுற்றால் பெறத் தகுதி பெறுகிறார்.

★ தகுதி பெற்ற பின்னும் தர வேண்டியவரை நாடி தகுதியால் பணிந்து வேண்டினால் பெற்றவர் தர மறுப்பார் என்பது வழக்கு.

★ வழக்கை மீறி ஒருவர் கொடுக்க விரும்பினால் பெற்றவர் அதனால் பயன் பெறமாட்டார் என்பது உலக அனுபவம்.

★ வீடு தேடி வந்து நெடுநாள் விரும்பிக் கேட்டாலும் பெற்றபின் பெற்றதால் பயன்பெற நிபந்தனைகளுண்டு.



★ நிபந்தனையின்றி வந்த உதவி பலன் தராமல் போனது நிதர்சனம்.

★ பெருந்தன்மை, தாராள மனப்பான்மை காரணமாக பெரிய ஆத்மாக்கள் உலக மக்களை நாடி உத்தம இரகஸ்யத்தை உபதேசிக்க முயன்றால் எவரும் கேட்க முன்வருவதில்லை என்பது இலட்சிய புருஷர்களின் வரலாறு.

★ நாடிப் போய்க் கிடைக்காததைத் தேடி வந்து விரும்பிக் கொடுத்தால் பெறுபவரில்லை.

★ வற்புறுத்திக் கொடுத்தால், இரகஸ்யம் வேண்டாம், நீங்களே பலனை பெற்று எனக்குக் கொடுங்கள் என்பது அப்படி முயன்றவர் அனைவரின் அனுபவம்.

★ கொடுப்பவர் கை உயர்ந்தும், பெறுபவர் கை தாழ்ந்து-மிருப்பதை எடுத்துக் கூறுவதுண்டு.

★ உலகம் இந்த நிமிஷம் அதிகபட்சம் பெறக்கூடியதைப் பெற்றுவிட்டது என்பது உண்மை.

★ மேலும் பெற வேண்டும் எனக் கருதும் இலட்சிய புருஷர்கள் மனித சுபாவத்தின் அடித்தளத்தை அறியாதவர்.

★ சேவையை யதார்த்தத்தை மீறிக் கருதினால் சேவை வேலையாக மாறும்.

★ மாறிய வேலை பயன் தராது.

★ பயன் பெற்றால், பெற்றவர் சேவைக்கு எதிராகக் குரலெழுப்புவார்.

★ சேவையின் உள் நோக்கம் என்ன என்று வினவுவார்.

★ ‘‘உன் சேவையை நான் பெறுவதால் உனக்கு ஏதாவது வந்துவிட்டதானால் என் செய்வது?’’ என அங்கலாய்ப்பார்.

***

**II/28) ஒரு விஷயம் புரிய நாம் சிந்திக்கின்றோம். புரியா விட்டால் ஆழ்ந்து சிந்திக்கிறோம். மனிதனுக்குப் புரியாத பிரச்சனைகளுண்டு. தீர்வு கிடைப்பதில்லை என்பதுடன் சிந்தனைக்கு அவை எட்டுவதில்லை. அதைத் தீர்க்க நாம் சிந்திப்பதை நிறுத்தி மௌனத்தைக் கடைப்பிடிக்கிறோம்.**

☆ **தன் ஆழ்ந்த பிரச்சனைகளைத் தீர்க்க மனித குலம் சிந்தனையைக் கையாள்கிறது. சிந்தனை விலகிய பின் பிரச்சனை தீரும்.**

★ மனம் உடையவன் மனிதன். மனு என்றனர்.

★ மனத்தின் திறன் சிந்தனை.

★ 'சித்'தின் செயல் சிந்தனை.

★ இரு விஷயங்களை மனம் தன்னில் இணைத்துக் கருதுவது சிந்தனை.

★ தொடர்பு ஏற்பட்டவுடன் துலங்குவது சிந்தனை.

★ தொடர்ந்த சிந்தனை ஆழ்ந்த சிந்தனை.

★ பார்வைக்குப் புரியாதது சிந்தனைக்குப் புரியும்.

★ சிந்தனைக்குப் புரியாதது ஆழ்ந்த சிந்தனைக்குப் புரியும்.

★ ஆழ்மனம் ஆழ்ந்த சிந்தனையை மேற்கொள்கிறது.

★ ஆழ்மனம் சிந்திக்க மேல்மனம் மௌனம் பூண வேண்டும்.

★ மேல்மனம் சிந்தனையைக் கைவிடாது.

★ சிந்தனையால் பலனில்லை என்பது வரை சிந்தனை தொடரும்.

★ தோல்வி முழுமையாகும் வரை மௌனம் வாராது.

★ மேல்மனத்தின் மௌனம் ஆழ்மனத்தின் சிந்தனை.



★ நாம் மனம் என்பது மேல்மனம்.

★ மனத்தின் சிந்தனை தவறும்பொழுது மௌனம் தழுவும்.

★ சிந்திப்பவன் சீரிய மனிதன்.

★ சிந்திக்க முடியாதவன் அறிவில்லாதவன்.

★ சிந்திக்க முடியாமல் சிந்தனையைக் கைவிட்டால், மௌனம் தீர்வு தரும்.

★ சிந்தனையுள்ளவன், சிந்தனை பயனற்றது என அறிந்து சிந்திக்க மறுப்பது மௌனம்.

★ ஆழ்மன சிந்தனை மௌனம். அது மேல்மன மௌனமாவது சிந்தனையின் உயர் பலன்.

★ கைவிட்ட சிந்தனை, உடனே பலன் தரும்.

★ பரந்த பெரிய விஷயங்களில் சிந்தனையைக் கைவிட்டால் மறதி எழும்.

★ மறதி மௌன சித்தி.

★ நெடுநாள் மறந்த விஷயம் ஆழ்மனத்தின் சிந்தனைக்கு அணி செய்யும்.

★ ஆழ்மனம் சிந்தனையை முடித்து தெளிவு பெற்ற நேரம் மேல்மனம் நினைவு கூறும்.

★ எழும் நினைவு ஆழ்மனம் பெற்ற தீர்வை மேல்மனம் அறிவது.

★ அது அந்தராத்மாவில் குரல் எனப்படும்.

★ அசரிரீ, வாணி எனவும் கூறுவர்.

★ ஆழ்மனமும் மௌனமானால், ஆத்மா விழித்து வழிகாட்டும்.

★ மனிதனுடைய பிரச்சனைகளை ஆழ்மனம் தீர்க்கவல்லது.

★ இறைவனுடைய வாய்ப்புகளை ஆழ்மனத்திற்கு அறிவிப்பது அசரீரி.

- அசரீரி வாய்ப்பைப் பேசுவது ஆண்டவன் குரல் கேட்கும்.
- அசரீரி தீர்வைக் கூறினால் அது ஆழ்மனம் எழுப்பிய குரலாகும்.
- மேல்மனம் மௌனம் பூண்டு, அதைத் தொடர்ந்து ஆழ்மனம் மௌனம் பூண்டு எழுந்த அசரீரி "புதுவைக்கு போ" என பகவானுக்கு சந்திரநாகூரிலிருக்கும் பொழுது பணித்தது. அது யோகம் செய்யும் பணி.
- "நானிருக்கிறேன். நீ பேசக்கூடாது" என கோர்ட்டில் எழுந்த குரல் ஆழ்மனம் பொய்க் கேஸை வெல்லும் குரல்.
- சிந்தனை சீரியது. சிந்தனையைக் கடந்த மௌனம் மகத்தானது.

  மௌனத்தைக் கடந்த மௌனம் பகவான் உறையுமிடம்.

✵✵✵

**II/29) வாழ்வு ஆசையாலானது. சிறு ஆசை மனிதனை உத்வேகப்படுத்துகிறது. நாம் சும்மா இருந்தால், ஆழ்மனம் தன் சிறு ஆசைகளில் தீவிரமாக உழல்கிறது.**

☆ **மனத்தின் ஆழம் ஆசையை ஆழ்ந்து அனுபவிக்கும்.**

- ஆசை அன்பின் முந்தைய நிலை.
- உணர்ச்சி இதயத்திற்குரியது.
- கிளர்ச்சி உடலுக்குரியது.
- உணர்ச்சியும், கிளர்ச்சியும் சந்திக்குமிடம் வயிறு.
- வயிறெரிகிறது என்பது ஆசை அழியும் பொழுது எழுவது.
- வயிற்றில் பால் வார்த்தால் போலிருக்கிறது என்பது ஆசை பூர்த்தியாகி உணர்வாவது.
- ஆசையை அழிப்பது துறவு.



- ஆசையை அடக்கி வாழ்வது இல்லறம்.
- ஆசை தவறு, ஆசைப்படக்கூடாது என்பவை அனுபவம் வரும் முன் எழும் எண்ணங்கள்.
- ஆசையை அடக்கினால், அடங்கும். அதிக நாள் கழித்து அதிவேகமாக வெளிவரும்.
- துறவி தன் ஆசையை மோட்சம் பெறும் ஆசையாக மாற்றுகிறான்.
- தவசிரேஷ்டர் ஆசையின் மூலத்தை அறிந்தவர்.
- திருமூலர் மூலம் அறிந்தவர்.
- திருமந்திரம் அவர் எழுதியது.
- அவர் ஆசையின் ஆழ்ந்த உருவத்தை அறிந்தவர்.
- *'ஈசனோடாயினும் ஆசை அறுமின்'* என்றார்.
- ஆசை எந்த ரூபத்திலும் நல்லது செய்யாது என்று அறிந்தவர் திருமூலர்.
- அகந்தை எந்த ரூபத்திலும் நல்லது செய்யாது என நக்கீரன் வாழ்வு கூறுகிறது.
- *நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே* என அகந்தை அவரைக் கூற வைத்தது.
- கயிலாயத்திற்கு உடலின் தசையெல்லாம் உருகி என்பாகும் வரை உருண்டு சென்று எழுந்த அகங்காரத்தை அழிக்க வேண்டும் என அவர் அறிந்தார்.
- பாசம் எழுந்து, வேகமிழந்து, ஆசையாகி, உயர்ந்து மனத்தையடைந்து அன்பாக மாறுவது பரிணாமம்.
- பாசம் உடலுக்குரியது.
- ஆசை உயிருக்குரியது.
- அன்பு மனத்திற்கும், ஆத்மாவுக்கும் உரியது.

- ★ உடலிலிருந்து உயர்ந்து ஆத்மாவை அடைவது பரிணாமம்.
- ★ ஸ்ரீ அரவிந்தம் ஆசையை அழிக்காதே, அனுபவிக்க முனையாதே, எல்லைக்குள் அனுபவித்து அறிவால் அதை வென்று அன்பாகத் திருவுருமாற்ற அழைக்கிறது.
- ★ துறவறத்தின் தூய்மையுள்ள இல்லறம் என்பது அதுவே.
- ★ சிறு ஆசைகள் எழுந்தபடியிருக்கும்.
- ★ அறிவு அவற்றைப் பொருட்படுத்தாது.
- ★ பண்புள்ள அறிவு சிறு ஆசைகட்கு வெட்கப்படும்.
- ★ வெட்கம் சிறியதினின்று மனத்தை விலக்கும் சிறப்புடையது.
- ★ லிடியாவும், விக்காமும் திருமணமான பின் ஓடிப்போனதற்கு வெட்கப்படாமல் வீட்டிலும் ஊரிலும் பழகியதை வீட்டில் அனைவரும் கண்டு ஆச்சரியப்பட்டனர்.
- ★ மாறாக, அவர்களுடன் சேர்ந்து வீடு வீடாகப் போய் திருமணத்தைக் கொண்டாடினார் மிஸஸ். பென்னட்.
- ★ லிடியாவுக்கும், விக்காமிற்கும் வெட்கமில்லை.
- ★ இந்த ஜன்மத்தில் வெட்கத்தைப் பெற முடியாத பிறவி மிஸஸ். பென்னட்.

✲✲✲

**II/30) பரநலம், சுயநலம் என்பது கொடுப்பது, பெறுவதாகும். அது சௌகர்யமாகவோ, தொந்தரவாகவோ அமையும். தன்னலமற்றவனின் நட்பு மற்றவர் வாழ்வை மலரச் செய்யும். சுயநலமானவனின் தொடர்பு, வாழ்வில் சிரமங்களை உற்பத்தி செய்யும்.**

☆ **சுயநலம் சுருக்கும், பரநலம் மலரும்.**

- ★ மனிதன் விலங்கிலிருந்து வேறுபட்டவன்.



- ★ வேறுபடாமல் மனிதனாக முடியாது.
- ★ அறிவால் வேறுபடுவது, திறமையால் உயர்வது.
- ★ பண்பால் வேறுபடுவது, வேறுபாடு மாறுபாடாவது, தரத்தால் வேறுபட்டுயர்வது.
- ★ நாலு கால்களால் நடக்கும் விலங்கின் பார்வை தரை மீதிருக்கும்.
- ★ இரு கால்களால் நடக்கும்பொழுது பார்வை வெகுதூரம் போவதுடன், வானை நோக்கிப் பார்க்க இயலும்.
- ★ ஆன்மீக ஞானப்படி, மனிதன் என்பவன் ஜீவனுள்ள ஜீவாத்மா, உயிருள்ள உடல் மட்டுமல்ல.
- ★ ஜீவாத்மா, பல ஆயிரம் ஜீவாத்மாக்களில் ஒன்று.
- ★ ஜீவாத்மாக்கள் பரமாத்மாவினின்று சிருஷ்டிக்கப்பட்டவை. அவற்றின் அமைப்பை உபநிஷதம்,
  - ✲ எல்லா ஜீவாத்மாவிலும் பரமாத்மா உள்ளது.
  - ✲ எல்லா ஜீவாத்மாக்களும் பரமாத்மாவில் உள்ளன.
  - ✲ ஒவ்வொரு ஜீவாத்மாவும் மற்ற அனைத்து ஜீவாத்மாக்-களுக்குள் உள்ளன.
  - ✲ மேலும் பரமாத்மா ஒவ்வொரு ஜீவாத்மாவிலும் தனி மனிதனாக உறைகிறது.
- ★ மனம் பகுதியான பார்வையுடையது.
- ★ தான் அனைவரிலும் உள்ளதை மனம் அறியும்.
- ★ அனைவரும் தன்னில் உள்ளதை மனம் அறிய இயலாது.
- ★ தான் அனைவருள்ளும் இருப்பதால் அனைவரும் தனக்குச் சேவை செய்ய வேண்டும் என மனிதன் ஆழ்ந்து நம்புகிறான் - அது சுயநலம்.
- ★ அத்துடன் அவன் பரமாத்மாவைக் காணும்பொழுது

தன்னையே உலகம் மையமானது எனக் கொள்வதால்

- ※ இறைவன் என ஒருவரிருந்தால் என் தேவைகளை அவர் பூர்த்தி செய்ய வேண்டும் என நினைப்பதுடன்,
- ※ அதைச் செய்யாத இறைவன் எனக்குத் தேவையில்லை எனவும் நம்புகிறான்.

★ இதனால் சுயநலம் வளர்கிறது.

★ அது திறமையால் வளர்கிறது.

★ வாழ்வு திறமையால் மட்டும் நடப்பதல்ல, திறமையைக் கடந்துள்ள பல வாழ்வுக்குத் தேவையென அறியும் நேரம் வரும்பொழுது பரநலமில்லாமல் மனிதன் வாழ முடியாது. இதுவரை தான் வாழ்ந்த வாழ்வை ஆயிரக்கணக்கானவர், ஆயிரக்கணக்கான வகைகளில் நடத்தியுள்ளனர் எனத் தெரியும்.

★ அந்த ஞானம் பரநலத்திற்கு அடிப்படை.

★ சுயநலம் பெறும், பரநலம் கொடுக்கும்.

★ கொடுக்காமல் வாழ முடியாது என அறிந்தவனுக்கு நமக்குக் கொடுக்கும் உரிமை மட்டும் உண்டு எனப் புரியும். நாம் பெறுவது அனைத்தும் பிறர் கொடுப்பதால் எனவும் புரியும். கொடுப்பதால் வளர்வது வாழ்வு. இறைக்காத கிணறு பாசி பிடிக்கும், பயன்படாது.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

***விரயம் இயற்கையின் சின்னம்.***





## சில சிறப்பம்சங்கள்

★ பகுதியான அத்தியாயங்கள் முழுமையாக எழுதப்பட்டுள்ளன.

★ மனம், வாழ்வு, காலம், இடம், ஜடம், ஆன்மா, சிந்தனை போன்ற கருத்துகள் உலகம் ஏற்றவை. ஆனால் இதுவரை அவற்றை எவரும் விளக்கிக் கூறியதில்லை, (definition) விளக்கமளித்ததில்லை. பகவான் அவற்றை விளக்குகிறார்.

★ அனந்தம், பிரம்மம், சிருஷ்டி, ஆனந்தம் ஆகியவற்றை மனத்தால் விளக்கியுள்ளனர். பகவான் அவற்றை மனத்தைக் கடந்த சத்தியஜீவியத்தால் புது விளக்கம் தருகிறார்.

★ மாயை என்பது இல்லாதது என நாம் அறிவோம். வேதம் மாயை என்ற சொல் சிருஷ்டிப்பது எனக் கூறுகிறது. பகவான் அந்த அடிப்படையில் மாயையை விளக்கி, அதனால் உலகம் அற்புதமானது எனக் கூறுகிறார்.

★ இறைவன் உலகை சிருஷ்டித்தான் என்பதை மாற்றி, இறைவன் தானே உலகமாக மாறினான் என்கிறார்.

★ கோப்பர்னிகஸ் பூமி சூரியனைச் சுற்றி வருகிறது எனக் கூறியது போல் தீமை, சிருஷ்டி, புனர்ஜென்மம், பிரம்மம், அனந்தம் போன்றவற்றிற்குப் புரட்சிகரமான விளக்கம் கூறுகிறார்.

★ ஜீவாத்மா மோட்சம் பெற்று பரமாத்மாவில் கரைகிறது என்பது மரபு கூறும் தத்துவம். ஜீவாத்மா, அகந்தையை இழந்து, பிரபஞ்ச ஆத்மாவாகி, இயற்கையைக் கடந்து பிரம்ம

ஆத்மாவாகி சிருஷ்டியை ஈஸ்வர-சக்தியாக நிர்வாகம் செய்கிறது என பகவான் கூறுகிறார்.

★ ஞானம் வேதத்தால் சித்தியெனவும், அஞ்ஞானம் அசித்தி எனவும் கூறப்படுகிறது. உபநிஷதம் ஞானம், அஞ்ஞானத்தை வித்யா, அவித்யா எனக் கூறுகிறது. இவை பகுதியான விளக்கங்கள்.

அடிப்படை கருத்துகளைப் பகுதியாக விளக்குவதால், இருள், தீமை, துன்பம், வலி ஆகியவற்றிற்கு இத்தத்துவங்களால் பதிலிருக்க முடியவில்லை.

அஞ்ஞானம் என்பது ஞானத்தின் மறுஉருவம், சிறுஉருவம் என பகவான் கூறுவதால் இருள், தீமை, துன்பம், வலி, நோய் அழிய ஸ்ரீ அரவிந்தம் வழி கூற முடிகிறது.

★ இதுவரை எழுந்த தத்துவங்கள் இறைவன் உலகைப் படைத்ததைக் கூறின.

முதன்முறையாக பகவான் மனிதன் இறைவனை நோக்கி உயர்ந்தெழும் முறையைக் கூறுகிறார்.

இது பரிணாமம் எனப்படும்.

வேதாந்தம் இக்கருத்தைக் கூறியது, இடைவெளியில் நிறுத்திவிட்டது.

இதன் அடிப்படை மனிதன் இறைவன்.

அதன் ஆரம்பம் இறைவன் உலகமாவது.

இதன் சிறப்பான அம்சம் உலகில் தீமையில்லை.

மனித முடிவுகட்குட்பட்டது உலக இயக்கம் என்பது அடுத்த முக்கிய கருத்து.

இக்கூற்று விஞ்ஞானத்தின் அடிப்படையை ரத்து செய்கிறது.

ஜடம் மனத்தைவிட உயர்ந்தது என்பது மாறி, மனம்



ஜடத்தைவிட உயர்ந்தது என்பது தெளிவாகிறது.

இதனால் அத்துவைதம், துவைதம், விசிஷ்டாத்தைவதம் ஆகியவற்றிற்குள்ள பேதம் அழிந்து, பிணக்கற்ற இந்து தத்துவம் உருவாகிறது.

கர்மம் அழிந்து மனிதன் காலத்தின் பிடியினின்று விடுபடுகிறான்.

புனர்ஜென்மமழிந்து வாழ்வு அமரத்துவம் பெறுகிறது.

❋❋❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமயோசித புத்தி, பவித்திரமான சத்தியமாகவோ, இருண்ட பொய்யின் உருவகமாகவோ இருக்க முடியும்.

***சமயோசிதம் மெய்யையும் பொய்யையும் ஏற்கும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பொய் தொடர்ந்து உன்னை நாடினால், அது உன்னுள் உள்ள பொய்யின் பிரதிபலிப்பாகும். அல்லது உயர்ந்த சத்தியத்திற்கு நீ உரியவன் ஆவாய்.

***உள்ளத்தின் பிரதிபலிப்பு தொடர்ந்து நாடும்.***

## நிலையும் நினைப்பும்

N. அசோகன்

நம்முடைய அகந்தை உண்மையில் ஒரு குப்பைக் கூட்டமாகும். ஆனால் அது ஒரு விலைமதிப்பற்ற ரத்தினம் என்றும், அப்படி தன்னை நாம் நடத்த வேண்டும் என்றும் நம்மை அது நம்ப வைத்துள்ளது. இது ஒரு தவறான கருத்தாகும். ஆனால் உண்மையில் நம்மிடம் உள்ள விலைமதிப்பற்ற ரத்தினம் நம்முடைய சைத்திய புருஷன்தான். ஆனால் அது இருப்பதுகூட நமக்குத் தெரிவதில்லை. அகந்தையைப் பற்றிய தவறான கருத்திலிருந்து நாம் விடுபட்டு அதை நாம் குப்பையைப் போல உண்மையில் நம் personalityயிலிருந்து களைந்து எடுத்துவிட்டு, நம்முடைய சைத்திய புருஷனை மேல் மட்டத்திற்கு கொண்டு வந்து, அதற்குரிய முக்கியத்துவத்தை நாம் வழங்குவதுதான் சரியான செயல்பாடாக அமையும்.

❃❃❃

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அகந்தையிலுள்ள ஒளி தானழிய பிரார்த்திக்கும்.
அகந்தை தன் அழிவை நாடாது.

***அகந்தைக்கு வித்தான ஒளி.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# மௌனமான மனோ சக்தி - Silent Will

அன்பர் ஒருவர் கருத்துகளை ஆய்வதில் முனைபவர். எந்த கட்டுப்பாட்டையும் ஏற்க இயலாத மனம். அன்னை மீது தனக்கு நம்பிக்கையில்லை என நம்புபவர். கபடமற்ற உள்ளம். விபரமறியாத சுபாவம். வேலையில் சுறுசுறுப்பு. ஆர்வம் எழுந்தால் எதையும் செய்பவர். அலைகடல் மோதினாலும் அசையாத பாங்கு. அவருக்கு Silent Will பல நாட்களாக எண்ணமாக எழுந்து, அனுபவமாக அறிவுறுத்துகிறது.

★ சில சமயம் பலிக்கிறது. சில பேருக்கும் பலிக்கிறது. சில விஷயத்தில் பலிக்கிறது. ஏன் என்பது அவர் கேள்வி.

(இது ஆதி நாள் தத்துவ விசாரணை. மெய் பேசுவதற்கு இது பொருந்தும். **உலகம் பலவிதம். எப்படி சத்தியத்தின் நடைமுறைச் சிறப்பை அறிவது?** தவறானவன் தவறாமல் ஜெயிக்கிறான். காந்திஜீ சுட்டுக் கொல்லப்பட்டார். எப்படி விளங்கும் என்ற கேள்விகட்கு முடிவான பதில் பெற விரும்புபவர் *The Life Divine*யை வாழ்வில் புரிந்து கொண்டால் முடியும். இதை செய்ய முன் வருபவர்கள் இல்லை. இவை உலகில் இதுவரை விளக்காத கேள்விகள்).

★ இந்த அன்பருக்கு இன்று காலையில் எழுந்த கேள்வி, "கம்பனிகள் கோடிக்கணக்காக விளம்பரம் செய்து, பெரும் பயனடைகிறார்கள். விளம்பரத்தைத் தவிர்த்து மௌனமானால், அதிகமாக வியாபாரமாகும் என நான் அறிகிறேன். இதை ஒரு கம்பனிக்கு அவர்கள் ஏற்கும் வகையில் எடுத்துக் கூற முடியுமா?"

**முடியும் என்றால் அது என்ன என்று கூற முடியுமா?**

***அடுத்தவர் அன்னையைப் பெற விரும்பும்***
***இதயத்தை அன்னை நாடுவார்.***

(பின்பக்க அட்டையில் தொடரும்......)

❋❋❋

(......முன்பக்க அட்டை தொடர்ச்சி)

# ஆப்பிள் - Apple

*ஆப்பிள்* என்பது உலகப் பிரசித்தி பெற்ற அமெரிக்க கம்ப்யூட்டர் கம்பனியின் பெயர். ஸ்தாபகர் அனாதை. கல்லூரிப் படிப்பை விட்டு சிறு கம்பனி ஆரம்பித்து பெருவெற்றி கண்டவர். கூட்டாளிகள் இவரை கம்பனியிலிருந்து விலக்கினர். புது கம்பனி ஆரம்பித்து பிரபலமானார். மீண்டும் *ஆப்பிளு*க்கு அழைத்தனர். வந்து சேர்ந்தார். கம்பனி மேலும் மேலும் உயர்ந்தது. கம்ப்யூட்டர் வந்தபின் நடந்த புரட்சிகள் ஏராளம். அவற்றுள் சிலவற்றிற்கு இவர் கர்த்தா. இவர் பெயர் ஸ்டீவ் ஜாப். இவருக்குக் கான்சர் வந்தது. இதைக் குணப்படுத்த முடியாது. 6 மாதத்திற்கு மேல் வாழ முடியாது என்றனர். 6 மாதமும் வாழ்ந்தார். டாக்டர்கள், இது குணமாகும் கான்சர் என புது அபிப்பிராயம் தெரிவித்தனர். இவரை சொற்பொழிவு ஆற்ற அழைத்தனர். உங்கள் வெற்றியின் இரகஸ்யம் என்ன என்றனர். "**இதுவே என் கடைசி நாள் என பல ஆண்டுகளாக வேலை செய்கிறேன். அதுவே இரகஸ்யம்**" என்றார். அந்த நிலையில் மனம் விலகும். மனம் விலகினால் ஆத்மா எழும். ஆத்மா எழுந்தால் எந்த வியாதியும் குணமாகும். அத்துடன் வாழ்க்கை மலரும். உலகளவு உயரும். அதையெல்லாம் இந்த அமெரிக்கர் அனுபவிக்கிறார். அவருக்கு இந்த ஆன்மீக விளக்கம் கூறுபவரில்லை.

முன் பக்க அட்டையிலுள்ள கேள்வியை எழுப்பிய அன்பருக்கு விளக்கமான பதில் கூறும்படி நான் உடனிருந்த அன்பரைக் கேட்டேன். **நான் பதில் கூறவில்லை. உதாரணம் சொல்கிறேன் என்றார்.**

"எல்லா கம்பனிகளும் ஏராளமாக விளம்பரம் செய்கின்றனர். சரக்கு வெளிவருமுன் விளம்பரம் செய்கின்றனர். *ஆப்பிள்* விளம்பரம் செய்வதில்லை என்ற கொள்கையுடைய கம்பனி. உலகில் சுமார் 1000 கம்ப்யூட்டர் பத்திரிகைகள் *ஆப்பிளை*க் கவனிக்கின்றன. யூகமாக என்ன செய்கிறார்கள் என எழுதுகிறார்கள். அப்படி *ஆப்பிளு*க்கு கிடைத்த விளம்பரம் இதுவரை எவரும் பெற்றதில்லை. சரக்கு வெளிவரும் நாளுக்கு உலகம் காத்திருக்கிறது. நீண்ட (queue) வரிசை கடை முன் இரவிலிருந்து நிற்கிறது. சரக்கு சப்ளை செய்ய முடியவில்லை. இந்த அளவு வியாபாரம் செய்த கம்பனி இதுவரை நாம் பார்த்ததில்லை" எனக் கூறி முடித்தார்.

**விளம்பரம் முக்கியம், பெரும்பலன் தரும்.**

**மௌன சக்தி அதைவிட முக்கியம், முடிவான பலன் தரும்.**

***அன்னை நம்மை நாட நாம் அடுத்தவரில்***
***அன்னையைக் காண வேண்டும்.***

❋❋❋

Vol. I Issue 3 June 2011

Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11

Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935

Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

| | |
|---|---|
| ESSAYS ON ACCOMPLISHMENT<br>N.Asokan | ரூ.150/- |
| கர்மயோகியின் | |
| அன்னையின் ஆன்மீகப்பரிசு | ரூ.100/- |
| லைப் டிவைன் - கருத்துகள் | ரூ.100/- |
| பரம்பொருள் III | ரூ.200/- |
| எங்கள் குடும்பம் (பாகம் 2) | ரூ.250/- |
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | ரூ.100/- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| லைப் டிவைன் விரிவுரைகள்<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| SATYA JYOTHI<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191

Vol. I Issue 3 June 2011

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஜூன் 2011